விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 09 வெள்ளிக்கிழமை (22.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 124

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## "அறிக்கையை வெளியிட வேண்டாம்" ஐ.நாவிடம் இலங்கை வேண்டுகோள்

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை வெளியிட வேண்டாமென ஐ.நா. சபையிடம் இலங்கை நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ் அறிக்கை இலங்கையில் இனங்களுக்கிடையில் மீளக் கட்டியமைக்கப்பட்டு வரும் நல்லிணக்கத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதுடன் ஐ.நா. அமைப்பிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் பேசும்போது தெரிவித்தார்.

நிபுணர்குழுவின் இந்த அறிக்கையை வெளியிடுவது அடிப்படைத் தவறாகும். நாம் ஐ.நாவுக்கு என்ன கூறுகிறோம் என்றால் எம்மை இணைந்து செயற்பட விடுங்கள் என்பதே. இலங்கை அதன் இருண்ட காலங்களிலிருந்து விடுபட்டு வெளிவரும்போது அதற்கு ஐ.நா. உதவவேண்டும்.

குறித்த அறிக்கை வெளியிடப்படும் பட்சத்தில் இலங்கையின் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்க முடியாது. இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சவாலாக அமையும். அதனால் அவ் அறிக்கை நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலேயே அமைய வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்பட்டமை தவறாகும். (02ஆம் பக்கம் பார்க்க)



## வன்னியில் வசித்து வந்த ஓர் இலட்சம் பேருக்கு நடந்தது என்ன?

கேள்வி எழுப்புகிறது சனல்-4 தொலைக்காட்சி

(கொழும்பு)

இறுதி நேர யுத்தத்தின் போது யுத்தப் பிரதேசத்தில் இருந்த ஓர் இலட்சம் பொதுமக்களுக்கு கணக்குக் காட்டப்படவில்லை என சனல்- 4 தொலைக்காட்சி சில ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டுள்ளது. இதேவேளையில், வெளியுலகத் தொடர்பின்றி மறைக்கப்பட்டுள்ள இலங்கையின் வடபகுதியில் பொதுமக்கள் அடக்குமுறைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளமை, அடக்கிவைக்கப்பட்டுள்ள முகாம்கள், அந்த மக்கள் மீதான பல்வேறு துஷ்பிரயோகங்கள் என்பவற்றை வெளிப்படுத்துகின்ற ஆதாரங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக சனல்- 4 தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனின் விளக்க அறிக்கை சில தினங்களில்

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து செயலாளர் நாயகம் பான் கீ மூனின் கருத்து இன்னும் இரண்டொரு தினங்களில் வெளியிடப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவரின் செய்திக் குறிப்பில், நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து அவரது முழுமையான கருத்து வெளியிடப்படும் என்று ஐ.நா. சபை இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து செய்திகள் கசிந்துள்ளன.


இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டு பல நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை அவர் அது குறித்து எதுவித கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புட்டபர்த்தியில் தடை உத்தரவு
## அபாய கட்டத்தில் சாய்பாபா

(சென்னை)

சாய்பாபா உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்து வருவதாக மருத்துவ குழுவினர் நேற்றுக்காலை தெரிவித்தனர்.

இதையடுத்து, அசம்பாவித சம்பவங்களை தடுக்க சுமார் 5 ஆயிரம் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். பக்தர்கள் யாரும் புட்டபர்த்திக்கு வரவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



சாய்பாபா உடல்நிலை கடந்த 28 ஆம் திகதி திடீரென பாதிக்கப்பட்டது. அங்குள்ள சத்யசாய் சூப்பர் ஸ்பெஷாலிட்டி உயர் நிலை மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார்.

இரத்தஅழுத்தம், நுரையீரலில் கோளாறு ஏற்பட்டதால் சாய்பாபாவுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. இதனால் அவருக்கு வென்டி லேட்டர் பொருத்தப்பட்டது. சிறு நீரகமும், கல்லீரலும் பாதிக்கப்பட்டதால் அவருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் இருந்து மருத்துவ நிபுணர் குழுவினரும், ஆந்திர மாநில சுகாதார செயலாளர் தலைமையில் மருத்துவ குழுவினரும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

சாய்பாபாவுக்கு இரத்த சுத்திகரிப்புக்காக டி.ஆர்.ஆர்.என்ற மருத்துவ முறையில் டயாலிசிஸ் செய்யப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, அவரது உடல்நலம் குறித்து பக்தர்களிடையே பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. பாபா ஒரேஒரு முறை பக்தர்களுக்கு தரிசனம் தரவேண்டும். அவரது உடல்நிலைகுறித்தஉண்மையான அறிக்கையை வெளியிடவேண்டும் என ஏராளமான பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாபா உடல்நலம்பெறவேண்டி, இந்தியா உட்பட 150 நாடுகளில்உள்ள பக்தர்கள் சிறப்பு பூஜை மற்றும் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் சாய்பாபாவின் உடல் நிலை குறித்து அவருக்கு சிகிச்சை அளித்து வரும் மருத்துவக் குழுவினர் நேற்றுக்காலை அதிகார பூர்வ அறிவிப்பு ஒன்றை வெளியிட்டனர். அதில், சாய்பாபாவின் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றாக (02ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் அறிக்கையை நிராகரிப்பது புலிகளைப் பாதுகாப்பதாகும்

ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை முழுமையாக நிராகரிப்பதானது போர்க் குற்றச்சாட்டுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் நிரபராதிகள் என மறைமுகமாக ஏற்றுக் கொள்வது போலான்தாகும் என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுப்பு என ஐ.தே.க. கூறுவதால் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை தாம் நிபந்தனையுடன் ஐ.தே.க.ஏற்றுக் கொள்வதாக அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹிரான் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ.நா.செயலரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை இவ்வாரத்திற்குள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை 2 ரூபாயினால் அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு இறாத்தல் பாணின் விலை நேற்று நள்ளிரவு முதல் 2 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பாணின் விலை அதிகரிக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

பிறிமா கோதுமை மா கிலோ ஒன்றின் விலை கடந்த திங்கட்கிழமை (02ஆம் பக்கம் பார்க்க)

CANADA
Rs. 3/-
Dialog

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## இளைஞனின் கத்திக்குத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

குடும்பஸ்தர் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொன்ற இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மகனுடன் தனிமையில் வசித்து வந்த நடுத்தர வயதுடைய தாயாரும் அடுத்த வீட்டில் மனைவியின்றி மகளுடன் வசித்து வந்த தந்தைக்கும் இடையில் ஏற்பட்டிருந்த உறவே இந்த அனர்த்தத்தில் போய் முடிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது தாயாரும் அவரது கள்ளக் காதலனும் தனிமையில் அடுத்த வீட்டில் இருந்த வேளை அங்கு சென்ற மகன், காதலன் மீது சரமாரியாகக் கத்தியால் குத்தியுள்ளார். அப்போது அவரது தாயாரும் காயத்திற்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடலின் பின்பக்கத்திலும் முதுகிலும் பல இடங்களில் கத்தியால் குத்தப்பட்டதனால் பொன்னம்பலம் விஜயரத்தினம் என்பவர் உயிரிழந்துள்ளார். அவரைக் குத்திக் கொன்ற இளைஞனை கிளிநொச்சி நீதவான் விளக்க மறியலில் வைக்குமாறு பூநகரி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். கடந்த செவ்வாய்க் கிழமை 19ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

## தினமும் ஒருவருக்காவது எயிட்ஸ் நோய் அரசாங்கம் நேற்று அறிவிப்பு

இலங்கையில் தினமும் குறைந்த பட்சம் ஒருவராவது எயிட்ஸ் நோய் உள்ளவரென நோய் நிர்ணயம் செய்யப்படுகின்றனர் என அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இலங்கையில் 300இற்கும் மேற்பட்ட எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இதுவரையில் 1250 எயிட்ஸ் நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

நாட்டில் எச்.ஐ.வி. பரவல் வீதம் குறைவாகவே காணப்படுகிறது. எனினும் நாம் வினைத்திறனான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அமைச்சர் கூறினார்.

எச்.ஐ.வி எயிட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களில் 61சதவீதமானவர்கள் மேல்மாகாணத்தில் உள்ளதாக அமைச்சர் கூறினார்.

பெண் பாலியல் தொழிலாளர்கள், ஒரு பாலின சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள், ஹெரோயின் பாவனையாளர்கள், கடற்கரைச் சிறுவர்கள், சிறைக்கைதிகள் ஆகியோரே அதிக பாதிப்புக்குள்ளாகுவதாக தேசிய பால்வினை எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுத்திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் எதிரிசிங்க கூறினார்.

40ஆயிரம் பாலியல் தொழிலாளர்கள், 35ஆயிரம் ஒரு பாலின சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள், 40ஆயிரம் ஹெரோயின் பாவனையாளர்கள் உள்ளனர். மேற்படி ஹெரோயின் பாவனையாளர்களில் ஒரு சதவீதமானோர் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றிக் கொள்கின்றனர். இவர்களுக்கு படிப்பினையூட்டி, எச்.ஐ.வி. சிகிச்சை அளித்தால் இந்நோய் பரவாமல் தடுக்கலாம் என டாக்டர் எதிரிசிங்க மேலும் கூறினார். (ச-5)

### பாணின் ...

4 ரூபாய் 10 சதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. இது தவிர செரண்டிப் கோதுமை மா கிலோ ஒன்றின் விலை கடந்த ஞாயிற்றுக் கிழமை 3ரூபாயினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5,6)

### ஐ.நாவின்...

ஐக்கிய நாடுகளின் உதவி நிரந்தர வதிவிட பிரதிநிதி சவேந்திர சில்வாவிடமிருந்து தமக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலரது பதில் பிரதி ஊடகப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவ்வார இறுதிக்குள் நிபுணர் குழுவின் அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிட தாம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை - அன்னலட்சுமி (லீலா)



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அன்னலட்சுமி (லீலாவதி) நேற்று (21.04.2011 ) கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற மு.கு.சின்னத்துரை சீனிப்பிள்ளையின் அன்பு மகளும், சாந்தகுமாரியின் தாயாரும் ஆனந்தராசாவின் மாமியும், யதுசியா (மானிப்பாய் மகளிர் கல்லூரி ) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னார் செல்வராசா, சோதிநாதன், பத்மநாதன், மகேஸ்வரி, கமலாம்பாள், பத்மாவதி, புவனேஸ்வரி, கண்மணியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை பகல் 2 மணிக்கு பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினருக்கு அறியத் -தருகின்றோம்.

தகவல்: மகள்: சாந்தா
மருமகன்: ஆனந்தராசா
(4662)

## அபாய கட்டத்தில் சாய்பாபா...

செயலிழந்து வருகிறது. மருத்துவ சிகிச்சையில் முன்னேற்றம் அடையவில்லை. அவர் அபாய கட்டத்தை நெருங்கி வருகிறார். ஆனாலும் அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளனர்.

பாபாவின் சிறுநீரகம், நுரையீரல், இதயம் போன்றவை சிகிச்சைக்கு ஒத்துழைக்கவில்லை என சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் சபாயா நேற்று காலை தெரிவித்தார்.

சாய்பாபாவின் உடல்நிலை குறித்து ஆந்திர முதல்வர் கிரண் குமார் ரெட்டி ஐதராபாத்தில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்ந்து கேட்டுவருகிறார்.

பாபாவின் உடல் நிலை மோசமடைந்து வருவதால் பக்தர்கள் அச்சமடைந்துள்ளனர். அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாத வகையில் பிரசாந்தி நிலையம், மருத்துவமனை வளாகம் உட்பட புட்டபர்த்தி முழுவதும் சுமார் 5 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

புட்டபர்த்திக்குள் பக்தர்களை நுழைய விடாமல் தடுக்க 150 செக் போஸ்ட் அமைக்கப்பட்டுள்ளது.

பக்தர்கள் யாரும் புட்டபர்த்திக்கு வரவேண்டாம் என்றும் வெளிநாட்டு பக்தர்கள் பெங்களூரில் தங்க வேண்டும் என்றும் சாய் அறக்கட்டளை குழுவினர் தெரிவித்துள்ளனர்.

புட்டபர்த்தியில் திடீர் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. அங்கு தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

**சொத்து யாருக்கு?**

சத்யசாய் அறக்கட்டளைக்கு மருத்துவ மனைகள் ,பள்ளிகள் ,கோயில்கள் என ஏராளமான சொத்துகள் உள்ளன. சாய் பாபாவுக்கு பிறகு அறக்கட்டளையை யார் பராமரிப்பது என்பதில் குழப்பம் நிலவி வருகிறது.

இதற்கிடையே சத்யசாய் அறக்கட்டளையின் முக்கிய உறுப்பினர்களான முன்னாள் தலைமை நீதிபதி பகவதி,பிரபல ஆடிட்டர் இந்து லால்ஷா ஆகியோர் மும்பையிலிருந்து புட்டபர்த்தி விரைந்துள்ளனர். இவர்கள் அறக்கட்டளையின் சொத்து ஆவணங்கள், கணக்கு வழக்குகளை ஆராய்வார்கள் எனத் தெரிகிறது. (ச)

## “அறிக்கையை வெளியிட...

நல்லிணக்க ஆணைக்குழு நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியங்களையும் பதிவு செய்து வருகின்றது. இவ்வாறானதொரு நிலையில் நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டமை தவறாகும்.

நியூயோர்க்கிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு கடந்த ஏப்பிரல் 12ஆம் திகதி இந்த அறிக்கை அனுப்பப்பட்டது. அந்நாட்டு நேரப்படி பகல் 12.15 மணியாகவிருந்தது. அறிக்கையைப் பார்த்தவுடன் இலங்கை அரசு அதனை நிராகரிப்பதாக உடனே அறிவித்தது.

இதேவேளை குறித்த அறிக்கையினை கசியவிடும் நடவடிக்கையிலும் இலங்கை அரசாங்கம் ஈடுபடவில்லை. குறித்த அறிக்கையின் முன்மொழிவுகளைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளும் இல்லாமற் செய்யப்படும்.

200 பக்கங்களைக் கொண்ட அறிக்கைக்கு ஏழு நாள் மற்றும் ஏழு மணித்தியாலத்திற்குள் பதிலளிக்க முடியாது. அத்துடன் இந்த நிபுணர் குழுவின் அறிக்கையை மேற்கத்தேய ஆலோசனைக்கிணங்க தயாரிக்கப்பட்டதாகும்.

குறித்த நிபுணர் குழு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்க அவரால் நியமிக்கப்பட்டதே தவிர ஐ.நாவின் எந்தவொரு சபையினாலும் நியமிக்கப்படவில்லை.

இலங்கையின் நீதிமன்ற முறைமை, சட்ட மா அதிபர் திணைக்களம், மக்களால் தெரிவுசெய்யப்பட்டோர் தொடர்பில் வெளிநாடுகளுக்கு கருத்துத் தெரிவிக்க முடியாது.

**குழுவை நியமிக்கவில்லை**

இலங்கையிலுள்ள பிரச்சினைக்கு முடிபு காண வெளிநாடுகள் நேர அவகாசம் வழங்க வேண்டும். ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதிலளிப்பதற்காக எந்தவொரு குழுவையும் அரசு நியமிக்க வில்லை.

நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் என்னால் கருத்துத் தெரிவிக்க முடியாது. குறித்த அறிக்கையை வெளியிட்டது பிழை என்று கூறும்போது அது தொடர்பில் என்னால் எதுவும் கூற முடியாது.

குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கங்கள் மற்றும் முன்மொழிவுகள் எதனையும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. 'குறித்த நிபுணர் குழு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கும் ஒரு குழுவே தவிர அது ஒரு ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவல்ல.

நிபுணர் குழு புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபடவில்லை. குற்றமிழைத்தவர்களை விசாரிக்கவுமில்லை. குறித்ததுறையில் அனுபவம் வாய்ந்தவர்களை கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கவே நியமிக்கப்பட்டது என்று அமைச்சர் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

**விற்பனைக்கு**

சகல விதமான கருங்கல் சல்லிகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புக்கு: 0777393158
(4636)

**மணல், சல்லி விற்பனைக்கு**

| | |
|---|---|
| நாகர்கோவில் மண் | 7500/= |
| கண்டாவளை மண் | 7000/= |
| கருங்கல் சல்லி 3/4” | 8750/= |
| கருங்கல் சல்லி 5நூல் | 9000/= |
| கருங்கல் சல்லி 1/2” | 8000/= |

தொடர்புகளுக்கு: 0777780882
(4661)

**அடையாள அட்டை தவறிவிட்டது**

நாகலிங்கம்-தமிழ்மகன் (நந்தகுமார்) (யூனிவசிற்றி மாஸ்டர்) 138/8, நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த எனது தேசிய அடையாள அட்டை (இல. 471554316V) நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் 21.03.2011 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் வலம்புரிக் காரியாலயத்தில் கொடுத்து உதவவும்.
(4658)

**காணி விற்பனைக்கு**

மருத்துவ பீடத்துக்கு முன் வீதியில் நல்லூர் பிரதேச சபைக்கு அருகாமையில் (500m) கிழக்கு கோணாவில்வளை வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0772203098
(சி-3045)

# இன்று ஒரு தகவல்

## வசிஷ்டரின் பெருமை

பரமசிவன் ஒரு சமயம் வசிஷ்டருக்கு ஒரு விசேடமான ஆசனம் கொடுத்திருந்தார். "அது சரி... அப்படி என்ன அந்த ஆசனத்தில் மிகவும் விசேடம்?" என்று நமக்கு கேட்கத் தோன்றுகிறது அல்லவா?

வசிஷ்டர் ஒரு குறிப்பிட்ட இடத்துக் போக வேண்டும் என்று நினைத்து புறப்பட்டால், அவருக்கு முன்னாலேயே அந்த ஆசனம் புறப்பட்டுச் சென்று ஒரு வசதியான இடமாகப் பார்த்து இருந்து கொள்ளும். பின்னர் வசிஷ்டர் போவார்... அங்கே சென்றதும் எங்கே உட்காரலாம் என்ற பிரச்சினை அவருக்கு ஏற்படாது.

நேராக தனது ஆசனம் இருக்கும் இடத்திற்குச் சென்று அதில் அமர்ந்து கொள்வார். இதைப் பார்த்த மற்ற முனிவர்களுக்குப் பொறாமையாக இருந்தது. எனவே, அவர்கள் அனைவரும் ஓர் இடத்தில் கூடி கலந்து பேசினார்கள்.

"என்ன இது? நாமும் இவரைப் போன்ற முனிவர்கள் தானே! இருந்தாலும் நமக்கு அது மாதிரி ஓர் ஆசனம் கிடைக்கவில்லையே? என்று யோசித்தார்கள்.

"சரி... நேராக நாம் அனைவருமே பரமசிவனிடம் சென்று, இதைப் பற்றிக் கேட்போம்" என்று முடிவு செய்தனர்.

அதன்படியே முனிவர்கள் சிவபெருமானிடம் சென்று, "சுவாமி! நாங்களும் முனிவர்கள்தானே! வசிஷ்டரைப் போல் நாங்களும் தங்களைக் குறித்துக் கடுந்தவம் செய்து கொண்டு தானே இருக்கிறோம்? அப்படியிருக்கும் போது அவருக்கு மட்டும் ஏன் இந்த விசேட சலுகை?" என்று வினவினார்கள்.

அதற்கு அவர் பதில் சொன்னார்.

"முனிவர்களே! உங்கள் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன்னால் நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்!" என்றார். என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள் என்று முனிவர்கள் கேட்டார்கள்.

"நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் போக வேண்டும். உங்களைவிட உயர்ந்தவர் ஒருவரைத் தேடி கண்டுபிடிக்க வேண்டும். அவருக்கு அதிதி பூஜை செய்து அவரை ஒரு மண்டலத்திற்குள் என்னிடம் அழைத்து வாருங்கள்" என்றார் சிவபெருமான்.

"சரி அவ்வளவுதானே! இதென்ன பெரிய காரியம்? அப்படியே செய்கிறோம்" என்று சொல்லி விட்டு முனிவர்கள் அங்கிருந்து சென்றார்கள். அவர்கள் போன பின்னர் சிவபெருமான் நந்திதேவரைக் கூப்பிட்டு வசிஷ்டரை அழைத்து வரச் சொன்னார். அதன்படி வசிஷ்டர் வந்து சிவபெருமானை வணங்கினார்.

அவரிடம் சிவபெருமான், "வசிஷ்டரே! இன்றையிலிருந்து ஒரு மண்டல காலத்திற்குள் உங்களை விட தாழ்ந்தவர் ஒருவரைத் தேடிக் கண்டுபிடியுங்கள். அவருக்கு அதிதி பூஜை செய்து அவரை என்னிடம் அழைத்து வாருங்கள்!" என்றார்.

ஒரு மண்டல காலம் கழிந்தது.

முனிவர்களெல்லாம் திரும்பி வந்து சிவபெருமானை வணங்கினர். "சுவாமி! எவ்வளவோ தேடிப் பார்த்தோம் எங்களைவிட உயர்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை" என்றார்கள்.

அதே சமயம் வசிஷ்டரும் அங்கு வந்து சேர்ந்தார். "சுவாமி! எவ்வளவோ தேடிப் பார்த்தேன்... என்னை விட தாழ்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை!"

"என் மனைவி எனக்கு அடங்கியவள் தானே அவளுக்காவது அதிதி பூஜை செய்து அழைத்து வரலாமா என்று யோசித்தேன். ஆனால் என் மனம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஏனெனில் அவளது பவித்திரத்திற்கு முன்னால் நான் எம்மாத்திரம் என்று யோசித்து பார்த்தேன். எனவே, அந்த எண்ணத்தையும் கைவிட வேண்டியதாயிற்று" என்று மிகவும் வருத்தத்துடன் தெரிவித்தார்.

இதைக் கேட்ட மற்ற முனிவர்களுக்கு ஒரே வெட்கமாகி விட்டது. "இந்த உலகில் நம்மைவிட மேலானவர் யாரும் கிடையாதென்று நாம் நினைத்தோம். ஆனால் வசிஷ்டரோ தன்னை விட உலகில் தாழ்ந்தவர்கள் யாருமே இல்லை என்று நினைக்கிறார்!" என்று நினைத்த போது முனிவர்களுக்கு வசிஷ்டரின் பெருமை புரிந்தது.

"பரமசிவன் ஏன் அந்த ஆசனத்தை வசிஷ்டருக்கு மட்டும் கொடுத்தார்?" என்ற கேள்விக்கான பதில் முனிவர்களுக்கு கிடைத்து விட்டது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து பொலிஸ் காவலரண் அகற்றப்படமாட்டாது

## உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எக்காரணத்தைக் கொண்டும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள பொலிஸ் காவலரண் அகற்றப்படமாட்டாதென உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள காவலரணை அகற்றுமாறு மாணவர்கள் கோரி வருகின்றனர். இது சம்பந்தமான கூட்டமொன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை நடைபெற்ற போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பொலிஸ் காவலரண்கள் உள்ளன. பாதுகாப்பு அரண்கள் வெளிநாடுகளில் கூட உள்ளன. மாணவர்களுக்கு உதவி செய்வதற்காகவே பொலிஸ் பாதுகாப்பு காவலரண்கள் உள்ளன. அதனை அகற்றுவதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இல்லையானால் இராணுவத்தினர், விமானப் படையினர், கடற்படையினர் அல்லது விசேட அதிரடிப்படையினர் இவர்களில் யாராவது பணிக்கமர்த்தப்படுவர்.

வடக்கு, கிழக்கு பிரதேசத்திலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு வரும் சிங்கள மாணவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மாணவர்களுக்கும் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் தமிழ் மாணவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சிங்கள் மாணவர்களுக்கு உள்ளது. இதனைக் கடைப்பிடித்தால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. 30 வருடங்ளாக நடைபெற்ற, இருந்து வந்த முரண்பாடு காரணமாக இரு தரப்பினர்களுக்கிடையேயுள்ள கசப்புணர்வுகளை மறந்து விட்டு விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

இந்த உயர் மட்டக் கூட்டத்தில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் , பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி பிரேம்குமார், பதிவாளர் தயாபரன் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், மாணவ ஒன்றியத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# மிதிவெடியால் பாதிக்கப்பட்டோருக்கு சொண்ட் நிறுவனம் வாழ்வாதார உதவி

(யாழ்ப்பாணம்)

சொண்ட் நிறுவனத்தால் மிதிவெடியால் பாதிப்படைந்தவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வடபிராந்திய மிதி வெடிசெயற்பாட்டு அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சி நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வன்னிப் போரின் போது மிதிவெடியில் சிக்கி தமது அங்கங்களை இழந்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்படி ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 5 பேருக்கு இந்நிதி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 90 |
| தக்காளி | 30 | 60 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 150 | 130 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 30 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 150 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 70 |
| பாகற்காய் | 120 | 100 | 130 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | -- |
| பயற்றங்காய் | 30 | 30 | 60 |
| லீக்ஸ் | 80 | 60 | 70 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 60 | 130 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 500 |
| போஞ்சி | 90 | 30 | -- |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 18 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# இராசி பலன்

*22.04.2011*
*(சித்திரை 9 ,வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு*
*பஞ்சமி பின்னிரவு 1.04 மணிவரை*
*கேட்டை முற்பகல் 10.05 மணிவரை*
*இராகுகாலம் 10.31-12.01 மணிவரை*
*சுபநேரம் 6.01-7.01 மணிவரை*
*பெரிய வெள்ளி*

**மேடம்** தேவைக்கேற்ப பணம் வந்து சேரும், கரைந்த சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உற்சாகத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள்.

**இடபம்** குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், பயணங்களால் அலைச்சல்களும் சோர்வும் ஏற்படலாம், தேகாரோக்கியத்தில் கூடிய கவனமெடுக்க வேண்டிய நாள்.

**மிதுனம்** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையும், விரும்பிய பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், இறை வழிபாட்டால் ஆனந்தமடைவீர்கள்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் புதிய நண்பர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, பழைய கடனை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடையும்.

**சிங்கம்** பிள்ளைகளால் பெருமையடையும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**கன்னி** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்,இல்லத்தில் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும், வாகன பழுதுபார்த்தல் செலவுகள் இடம்பெறலாம்.

**துலாம்** தெய்வ வழிபாட்டால் சந்தோஷம் அதிகரிக்கும், இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு, பிரயாண சுகமுண்டு.

**விருச்சிகம்** பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் சுமுகமாக முடியும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்.

**கும்பம்** மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், எடுத்த காரியம் நல்லபடியாக நடைபெறும், தனவரவு அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்,பொது வாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வளவன்

## புத்தாண்டு விழா

(காரைநகர்)

காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புத்தாண்டு தினவிழா நாளை சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் காரைநகர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பி.சசிக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக சமுர்த்தி இணைப்பாளர் அ.இரகுநாதன், கௌரவ விருந்தினராக காரைநகர் அபிவிருத்தி சபைத் தலைவர் க.சோமசேகரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியால அதிபர் கொ.சிவானந்தராஜா, காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி அதிபர் க.சோமசேகரம், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆளணி உதவியாளர் திருமதி அ.விஜயகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளாக கைக்கொடிசவாரி, கிடுகு பின்னுதல், வழுக்குமரம் ஏறுதல், தலையணைச் சண்டை போன்ற பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3,246)

# இலங்கை விவகாரத்தில் தொடர்ந்தும் நம்பியாரை ஈடுபடுத்துவது ஏன்?

## கேள்வி எழுப்புகிறது இன்னர் சிற்றி பிரஸ்

(கொழும்பு)

வெள்ளைக் கொடி விவகாரம் எனும் குறிப்பிடப்படும் விடயத்தில் நம்பியார் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறப்படும் நிலையில் அவரை இப்போதும் இலங்கை விடயத்தில் ஐ.நா. பயன்படுத்துவது ஏன்? என இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.



இலங்கை அரசின் தாக்குதல்கள் வன்னியில் தீவிரமாக இடம்பெற்ற காலத்தில் பான் கீ மூன் ஒருபோதும் யுத்த நிறுத்தத்திற்கான அழைப்பை விடுக்காதிருந்தது ஏன்?, நம்பியாரை தூதுவராக ஏன் அனுப்பியிருந்தார்? வெள்ளைக்கொடி விவகாரம் எனக் குறிப்பிடப்படும் விடயத்தில் நம்பியார் சம்மந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் நிலையில் அவரை இப்போதும் இலங்கை விடயத்தில் ஈடுபடுவதற்கு ஏன் இடமளிக்கப்பட்டுள்ளது?,

மார்ச் 31ஆம் திகதி அறிக்கை தயாராகி விட்டபோதும் அதனைக் கையளிப்பதற்கு ஏப்ரல் 12வரை கால அவகாசம் எடுக்கப்பட்டது ஏன்?,

ரஷ்ய விஜயத்தின்போது பான் கீ மூன் எந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவார்?, இந்த விடயங்கள் யாவும் செயலாளர் நாயகத்தின் இரண்டாவது பதவிக் காலத்திற்கு எவ்வாறு பயன்படுத்தப்படும்? என நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட இன்னர் சிற்றி பிரஸ் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

நிபுணர்குழுவின் அறிக்கையின் சில பகுதிகள் கசியவிடப்பட்டு 7நாட்கள் முழுமையாகக் கடந்துவிட்ட நிலையில் இந்த விடயத்தில் ஐ.நா. செயலகம் ஸ்தம்பிதமான நிலையையே கொண்டிருப்பதாகவும் இன்னர் சிற்றி பிரஸ் விமர்சனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இன்னர் சிற்றி பிரஸ் தெரிவிக்கையில்,

196பக்கங்களைக் கொண்டதாக அறிக்கையிருப்பதாக அவர்க்ள் கூறுகின்றனர். ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தரப் பிரதிநிதி சவேந்திர சில்வாவிடம் இதன் பிரதி ஏப்ரல் 13இல் வழங்கப்பட்டது. 24மணி நேரத்தில் இந்த அறிக்கையை ஐ.நா. பகிரங்கமாக வெளியிடும் என சவேந்திர சில்வாவிடம் தெரிவிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் மேலும் சிறிது கால அவகாசத்தை விரும்புகிறது என சில்வா பதிலளித்திருந்தார். இதற்கு 36மணித்தியாலங்கள் வழங்கலாம் என ஐ.நா பதிலளித்தது.

ஆனால் 36மணித்தியாலங்கள் கடந்துவிட்டன. அறிக்கையின் பிரதி இலங்கை ஊடகங்களில் கசிய விடப்பட்டுள்ளது. இவ்வாறு கசிய விடப்பட்ட அறிக்கையின் பிரதியை இன்னர் சிற்றி பிரஸ் வெளியிட்டுள்ளதுடன் இதுவரை பான் கீ மூனும் ஐ.நா செயலகமும் அறிக்கையை திட்டமிட்டபடி வெளியிடாதது ஏன்?

நிபுணர்குழுவினர் செய்ய வேண்டியதைச் செய்துள்ளனர். சகல தொண்டர் அமைப்புகளும், பணியாளர்களும் வன்னிப் பிரதேசத்தைவிட்டு வெளியேறியிருந்த நிலையில் மருத்துவ நிலையங்கள் மீது ஷெல்வீச்சு இடம்பெற்றமையை சர்வதேச பணியாளர்களின் சாட்சியத்தை முன்வைத்து அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இந்த விடயமே இலங்கை அரசின் பதிலுக்கான தீனியாக அமையும் என இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது. (எ-5)

# நாடுகடந்த தமிழீழ அரச பிரதிநிதிகளை த.தே. கூட்டமைப்பினர் சந்தித்தனர்?

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள்ளை சந்திக்கவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த 18ஆம் திகதி சிங்கப்பூர் சென்றதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை சந்தித்துள்ளமை குறித்து தன்னிடம் தகவல்கள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.



இலங்கையில் அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதற்காக சிங்கப்பூர் செல்வதற்கு தேவையில்லை எனவும் தனி ஈழத்தை அமைப்பதற்காக உதவிகளை, அனுசரணைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ளதாகவும் முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தாம் அரசியல் தீர்வு தொடர் பாக கலந்துரையாடும் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டதாகவும் அது அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இடம்பெற்றதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டோர் கருத்தரங்குகளில் கலந்து கொண்டனர். இந்த நிலையில் இலங்கையில் அரசாங்கத்திற்கும், கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வரும் நிலையில், வெளிநாடு ஒன்றில் இவ்வாறான பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டமையானது ஆபத்தான நிலைமையை தெளிவுபடுத்துவதாக பிரதியமைச்சர் முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மீண்டும் தமிழ் மக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் தேவையில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (ச-5)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடபிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

ஆனால் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இப்பிரதேசங்களுக்கான மின்தடை இடம் பெறாது.

அத்துடன் நாளை சனிக்கிழமை காலை 8.00மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ச)



யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ரஜிவர்மனின் குடும்பத்துக்கு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் நிதியுதவி வழங்கியுள்ளது.


கொழும்பிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை (19.04.2011) வந்த இந்த ஒன்றியத் தின் பிரதிநிதிகள் புத்தூரில் உள்ள ரஜிவர்மனின் இல்லத்துக்கு சென்று 20ஆயிரம்ரூபாயை ரஜிவர்மனின் தாயாரிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் பாரதி இராஜநாயகம், உப தலைவர் அ.நிக்ஸன், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சாந்தி சச்சிதானந்தம் மற்றும் யாழ். ஊடகவியலாளர் தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஒளியிழந்த திருவதனம்

யோ. பிரான்சீஸ் நாவாந்துறை

பன்னிரு சீடருள்ளே
பகைவனாய் எழுந்த யூதாஸ்
முப்பது காசுக்காக
யூதர்கள் தலைவனோடு
முன்சென்று முத்தமிட்டுக்
காட்டியே கையளிக்க
கத்தி வாள் பொல்லு ஈட்டி
கடின போர்க் கருவியோடு
கொடுவினை புரிய வென்றே
கூடியே வந்து நின்ற
சேவகர் தன்னைப் பார்த்து
யாரை நீர் தேடி வந்தீர்
தேடுவதென்னையென்றால்
இவர்களையிடர் பண்ணாமல்
இவ்விடம் விட்டகல
அனுமதியளிப்பீர் என்ற
இறை மகன் யேசுதன்னை
அணுகியே அவர் கரத்தை
கடின தோற்கயிற்றால் கட்டி
கள்வரையிழுப்பது போல்
வீதியால் இழுத்துச் சென்றார்



மண்ணில் வாழ் மாந்தருக்காய்
மனிதனாய் வந்த தேவன்
மகிமையை அறியா மூடர்
முள்ளினால் முடியைப் பின்னி
சிரசினில் அழுத்த இரத்தம்
பீறியே முகம் நனைக்க
பொன்னொளிச் சுடர் வதனம்
தண்ணொளி இழந்த தம்மா.

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து புத்திஜீவிகள் கருத்து

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு தற்போது தனது அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்ற நிலையில் அவ்வறிக்கை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தொடர்பாக இலங்கை வாழ் புத்திஜீவிகள் மற்றும் சமூக முக்கியஸ்தர்கள் சிலர் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அக்கருத்துக்கள் வருமாறு,

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவிக்கையில்,**

ஊடகங்களில் வெளியான சாராம்ச அறிக்கையை நாம் பார்த்திருக்கிறோம். முழு அறிக்கையையும் இன்னும் பார்க்கவில்லை. இந்த அறிக்கையிலுள்ள விடயங்களை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ முடியும். எனினும் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் இன்று இல்லாவிட்டாலும் இன்னும் 5 வருடங்களிலோ அல்லது 20 வருடங்களிலோ செயற்படுத்த முடியும்.

ஆனால், இந்தப் பிரச்சினையை ஒரே தடவையில் தீர்க்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு இருக்கிறது. அப்படித் தீர்க்காவிட்டால் பிரச்சினை தொடர்ந்தும் இருந்து கொண்டு தான் இருக்கும். இந்த அறிக்கை பொய்யானது, சூழ்ச்சி மிக்கது என்று சொல்லி நிராகரித்துக் கொண்டிருப்பதை விட விடயங்களை தேடிப்பார்த்து பிரச்சினையை தீர்க்க வேண்டும். ஏனெனில் குற்றச்சாட்டுக்களை வைத்துக்கொண்டு எம்மால் முன்னோக்கிச் செல்லமுடியாது.

இதேநேரம் விடுதலைப்புலிகளும் போர்க்குற்றங்களை இழைத்திருப்பதாக நிபுணர்குழு அறிக்கையில் தெரிவித்திருப்பதை புலம்பெயர் வாழ் தமிழ்மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். போர்க்குற்றங்களில் விடுதலைப் புலிகளுக்கும் பொறுப்பு இருக்கின்றதென்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இங்கு உண்மை என்னவெனில், இந்த அறிக்கைக்கு அரசாங்கம் தனது பதிலைக் கொடுக்க வேண்டும். அதைவிடுத்து நிராகரிப் பதில் பலனில்லை. அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்து முதிர்ச்சியான பதிலொன்றை வழங்க வேண்டியது அவசியம். அத்துடன் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சரியான நடவடிக்கையொன்று எடுக் கப்படுவதும் அவசியம் எனத் தெரி வித்துள்ளார்.

**தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவிக்கையில்,**

நிபுணர்குழு அறிக்கை விவகாரத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கமோ எந்தக் குற்றமும் இடம்பெறவில்லை என்கிறது. எனினும் சர்வதேசமோ தேடிக்கண்டறிய வேண்டும் என்கிறது. சர்வதேசத்தின் தலையீடு தேவையில்லை என்கிறது இலங்கை அரசாங்கம். அரசாங்கம் இவ்வாறான நிலைப்பாட்டிலிருக்கும் நிலையில் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றுப் பொறிமுறையொன்றை இலங்கை ஏற்படுத்த வேண்டும்.

சர்வதேசம் மட்டுமல்லாது இலங்கை வாழ் சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொறிமுறையொன்றை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அந்தப் பொறிமுறையில் அனைத்து எதிர்க்கட்சிகளினதும் சிறுபான்மைக் கட்சிகளினதும் சிவில் சமூகங்களினதும் பிரதி நிதித்துவங்கள் உள்வாங்கப்பட வேண்டும். அந்தப் பொறிமுறை சர்வதேச தரத்திலானதாக இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் ஐ.நா நிபுணர் குழு அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருப்பது போன்றதொரு சர்வதேச பொறிமுறையொன்றை இலங்கையில் ஏற்படுத்த முடியும்.

இதை இலங்கை அரசாங்கம் மட்டும் தனித்து ஏற்படுத்தினால் அதை யாரும் ஏற்கமாட்டார்கள். சர்வதேச சமூகம் ஏற்காது. அத்துடன் இலங்கையிலுள்ள சில இனப் பிரிவினரும் ஏற்கமாட்டார்கள். ஆகவே, சர்வதேசத்தின் தலையீட்டைத் தவிர்க்க பதிலளிப்பதற்கான உள்நாட்டு மாற்றுப் பொறிமுறையொன்று அவசியம். அடுத்ததாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் துரிதமாக வழங்கப்படவேண்டும். சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரமான அரசியல் தீர்வொன்றும் வழங்கப்படவேண்டும் என்றார்.

**சிவில் சமூகப் பிரதிநிதியான சுனிலா அபயசேகர தெரிவிக்கையில்,**

இதில் ஊடகங்களில் வெளியான விடயங்கள் பற்றி எமக்குத் தெரியும். உத்தியோகபூர்வ அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. அந்த அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை ஏற்பதா அல்லது இல்லையா என்பது அரசாங்கத்தின் பொறுப்பு. எவ்வாறிருப்பினும் பதிலளிக்கும் கடப்பாடு என்பதற்கு இலங்கை அரசாங்கம் மட்டுமன்றி எந்த அரசாங்கம் என்றாலும் முகங்கொடுத்துத்தான் ஆகவேண்டும். இந்த அரசாங்கத்துக்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது. இல்லாவிட்டால் ஜனநாயகம் பற்றிப் பேசிப் பலனில்லை. ஜன நாயகம் என்றால் பதிலளிக்கும் கடப்பாடு இருக்க வேண்டும் என்று கூறினார்.

**இலங்கையின் முதலாவது பெண் இராஜதந்திரியான மானல் அபயசேகர தெரிவிக்கையில்,**

நிபுணர் குழுவானது இலங்கை மீது விசாரணை நடத்துவதற்காக வன்றி தனக்கு ஆலோசனை வழங்கவென ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டதொன்று. இதன் அறிக்கையில் இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்புகள் மீதுமே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், சாசனங்கள் போன்றவற்றால் அரசாங்கத்துக்கு மட்டும் தான் பாதிப்பே தவிர பயங்கரவாத அமைப்புகளுக்கு அதில் பாதிப்பில்லை. சர்வதேச சாசனங்களிலோ அல்லது உடன் படிக்கைகளிலோ நாம் கைச்சாத்திட்டிருந்தால் அவற்றை நாம் பின்பற்றித்தானாக வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

# யாழ்.குடாநாட்டை மிதிவெடியற்ற பிரதேசமாக மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## யாழ்.மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டில் யாழ். குடாநாட்டை கண்ணிவெடியற்ற பிரதேசமாக மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடபிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தால் மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்விற்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு நேற்றும் நேற்று முன்தினமும் யாழ். இந்துக் கல்லூரியில் கண்காட்சி இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரைமுப்பதுவருடங்களுக்குப்பின்பு மக்களை மீள்குடியேற்றி வருகின்றோம்.

தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்களை மீள்குடியேற்ற வேண்டியது அவசியமானதொன்று.

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பல பகுதிகளிலும் இராணுவத்தினரின் ஒப்புதலுடன் மக்களை மீள் குடியேற்றி வருகின்றோம்.

அத்தோடு இன்னும் பல பகுதிகளில் மிதிவெடி அபாயம் இருப்பதனால் மக்களை மீள்குடியேற்ற முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

ஹலோரஸ்ட், யுனிசெப், இராணுவ பொறியியல் பிரிவு என்பவற்றால் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக யுத்தம் இடம்பெற்ற பிரதேசம் என்பதால் நிலக்கண்ணிவெடிகள் அதிகளவில் புதைக்கப்பட்டுள்ளது.

விவசாய நிலங்கள், வீட்டுக்காணிகள், பழுதடைந்த வீடுகள் போன்ற இடங்களில் மீள் குடியேறிய மக்கள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை, மக்களின் உயிரைப் பாதுகாக்க தமது உயிரை துச்சமாக மதித்து மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் பணியாளர்களுக்கு நன்றி கூறச் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே, இந்த வருட இறுதிக்குள் யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் மிதிவெடியை அகற்றி 2012 ஆம் ஆண்டு மிதிவெடியற்ற பிரதேசமாக மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-6)

# வட-கிழக்கில் பொலிஸ் சேவைக்கான நேர்முகப் பரீட்சை நேற்று நடைபெற்றது

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களின் இளைஞர், யுவதிககளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று நடைபெற்றுள்ளன.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நேற்றைய தினம் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின்றது.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய தமிழ் இளைஞர்-யுவதிகளில் தகுதியுடையோர் பொலிஸ் சேவையில் உள்வாங்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை ஸ்திரப் படுத்துவதற்கும் சட்டம் மற்றும் ஒழுங்குகளை பேணுவதற்காகவும் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

இதனையடுத்து கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் தனித்தனியே பொலிஸ் சேவைக்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(ஸ்ரீ-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

20 வருட அனுபவம்

APRIL. 2011 TO SEPT.2011

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48


விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011








மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்விற்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு நேற்றும் நேற்று முன்தினமும் யாழ்.இந்துக் கல்லூரியில் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. இதில் நேற்று மிதிவெடி அபாயம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணியொன்று இடம்பெற்றது. மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவியினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் வழங்குவதனையும் இராணுவ பொறியியல் படைப்பிரிவினரால் கண்ணிவெடி அகற்றுதலுக்கான செயன்முறை இடம்பெறுவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எஸ்.கரன்)

## வீதியில் குப்பைகளை வீசிய மூவருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

யாழ்.நகரப்பகுதியில் சூழலை அசுத்தப்படுத்தும் வகையில் வீதியில் குப்பைகளை வீசிய மூன்று நபர்களுக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து யாழ்.நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்குறித்த நபர்கள் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபாவும் ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்த உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## க.பொ.த. உயர்தர கலை வர்த்தக பிரிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் க.பொ.த.(உ/த)-2013 கலை, வர்த்தகப் பிரிவு வகுப்புகள் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

எனவே இவ்வருடம் க.பொ.த (உ/த) வகுப்பில் மனைப்பொருளியலையும் ஒரு பாடமாக ஆரம்பிக்கவுள்ளதால் க.பொ.த (சா/த) இல் சித்தியடைந்து மனைப்பொருளியல் பாடத்தில் திறமைச்சித்தி (சி) பெற்ற மாணவர்கள் கற்கையில் இணைய முடியும் என பாடசாலை அதிபர் க.சந்திரசேகரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## உள சமூக மேம்பாட்டுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு

(கொழும்புத்துறை)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினரால் உள சமூக மேம்பாட்டிற்கான ஒன்றுகூடல் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அகவொளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கியூடெக் கரித்தாஸ் நிறுவன சமூக மேம்பாட்டு முகாமையாளர் செல்வி.ம.பத்மசேகரி நிகழ்வை ஆரம்பித்து வைத்து தொடக்கவுரை ஆற்றவுள்ளார்.

கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்திரு ஜே.எக்ஸ்.பேனாட் றெக்னோ அடிகள் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

ஆன்மீகமும் ஆற்றுப்படுத்தலுக்கான உறவாடல் எனும் தலைப்பில் அகவொளி நிலைய இயக்குநர் அருட்திரு எஸ்.ஜே.இராசநாயகம் அடிகள் கருத்துரை ஆற்றவுள்ளார்.

கலைவழி உள வெளிப்பாடு எனும் நாடக ஆற்றுப்படுத்துநர் ஜோ.ஜெஸ்ரின் பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளதாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் செ.ஜோசப்பாலா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

தென்மராட்சி பிரதேசத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து சாவகச் சேரி நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இரு வெவ்வேறு சம்பவங்களில் இவ்வபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கொடிகாம பிரதேசத்தில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய சாரதிக்கும் சாவகச்சேரி பிரதேசத்தில் முச்சக்கரவண்டியை மதுபோதையில் செலுத்திய சாரதிக்கும் எதிராக வழக்குத் தொடுத்த பொலிஸார் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் நீதிமன்ற நீதிபதி மேற்படி நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தைச் செலுத்துமாறு தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-24)

## விளையாட்டுகளில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(கரவெட்டி)

விளையாட்டுகளில் ஈடு பட்ட மூவர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெல்லியடி கிழக்குப் பகுதியில் மாலை நேரம் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்ட சிறுவன் தவறி விழுந்து கை முறிந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த நாகராசா கௌரீசன் (வயது 12) என்ற சிறுவனே சிகிச்சை பெற்றுவருகிறார்.

மற்றுமொரு சம்பவம் கொற்றாவத்தைப் பகுதியில் உதைபந்தாட்டப் போட்டியில் ஈடுபட்ட அல்வாய் வடமேற்கு பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் சதீஸ்குமார் (வயது 21) என்ற இளைஞன் காலில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இன்னுமொரு சம்பவத்தில் பளை, வண்ணம்கேணி பகுதியில் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டிருந்த அப்பகுதியைச் சேர்ந்த நவரட்ணம் சுஜீபன் (வயது 16) என்ற சிறுவனும் இவ்வாறு காயமடைந்து சிகிச்சை பெற்றுவருகிறார். (ஸ்ரீ-3-24)

## வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(கரவெட்டி)

அல்வாய் கிழக்கு அத்தாய் கிராமத்திற்கு செல்லும் வீதி கடந்த 10 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாது குன்றும் குழியுமாக் காணப்படுவதாக அப்பகுதி மக்களும் பயணிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதுடன் இவ்வீதி புனரமைக்கப்படாமையில் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

அத்துடன் மழை காலங்களில் இவ்வீதியில் வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது.

இவ்வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் தொழில் நிமித்தம் செல்பவர்கள் உரிய நேரத்தில் கடமைக்கு செல்ல முடியாது சிரமப்படுகின்றனர்.

இது தொடர்பாக உரிய தரப்புக்கள் மிக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

## ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

யாழ்.நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதிக்கு 6 ஆயிரம் ரூபா விதித்து யாழ்.நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.நகரப் பகுதியில் கடந்த 19ஆம் திகதி சைக்கிளைச் செலுத்திச் சென்றவேளை யாழ். பொலிஸாரினால் பரிசோதனை செய்யப்பட்ட போது சாரதியிடம் வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், தலைக்கவசம் ஆகிய மூன்றும் இல்லாமல் பயணம் செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து மேற்படி நபருக்கு எதிராக நேற்று முன்தினம் யாழ்.பொலிஸாரினால் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 3 குற்றச்சாட்டுக்கும் மேற்படி அபராதத்தைச் செலுத்த உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## யாழ்.செய்திகள்

### பொதுக்கூட்டம்

யாழ்.பிரதேச செயலக கலாசார பேரவைப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் யாழ்.பிரதேச செயலகத்தை சேர்ந்த அங்கத்தவர்களை கலந்துகொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலர் திருமதி.சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)

### விளையாட்டு விழா

பருத்தித்துறை பொலிஸாரின் அனுசரணையுடன் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான புத்தாண்டு விளையாட்டு விழா எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-10)

### சிரமதானப் பணிகள்

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஜே/219 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட அளவெட்டி தெற்கு அலுக்கை கிராமத்தில் அனர்த்த முகாமைத்துவ செயற்றிட்டத்தின் கீழ் நேற்று காலை 9 மணி தொடக்கம் சிரமதான நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் ஜே/219 கிராம சேவகர் எஸ்.உமாகாந்தன் கியூடெக் கரித்தாஸ் நிறுவன கள உத்தியோகத்தர் ச.ஜோ.பாஸ்கரன் ஆகியோர் உட்பட 60 பேர் கொண்ட குழுவினர் இச் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (ஸ்ரீ-3-51)

# ஐக்கிய நாடுகள் செயலகத்தில் இருந்தே நிபுணர்குழுவின் அறிக்கை கசிந்துள்ளது

## பாலித கோஹண குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலகத்திலிருந்தே அதன் நிபுணர் குழுவின் அறிக்கை கசிந்துள்ளதாக ஐநா.வுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கோஹண குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்த ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையானது ஊடகங்களுக்குக் கசியும் சாத்தியம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்தை எச்சரித்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிக்கை வெளியில் கசியலாம் என ஐ.நா.சபை இலங்கையிடம் கவலை தெரிவித்திருந்தது.

ஏனெனில் ஐ.நா செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இருந்து அனைத்தும் வெளியில் கசிவதாக அது தெரிவித்திருந்தது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

மேலும் பிரஸ்தாப அறிக்கையில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் நோக்கில் அரசாங்கம் அதனை ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே நிபுணர் குழுவின் அறிக்கை ஐ.நா.செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து வெளியில் கசிந்திருக்கலாம் என்ற விடயத்தை அதன் துணைப் பேச்சாளர் பர்ஹான் வன்மையாக மறுத்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும்

## ஐ.தே.க.வேட்பாளர்களுக்கான விண்ணப்பம்

வேட்புமனுக்கள் கோரப்படாத 34 உள்ளூராட்சி மன்றங்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சி தமது வேட்பாளர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இவ்வாண்டு தேர்தல் நடத்தப்பட வேண்டியதெனினும் இதுவரையில் தேர்தல் நடத்தப்படாத 34 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிட விரும்பும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என கட்சி தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் கொழும்பு, கம்பஹா, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, குருணாநாகல், அநுராதபுரம், பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள தேர்தல் நடத்தப்படாத உள்ளூராட்சி மன்றங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவை கட்சியின் பொது செயலாளரை அடையும் வகையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கை-பங்களாதேஷ் உறவு மேலும் வலுப்பெற்றுள்ளது

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பங்களாதேஷ் விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுப்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்கள் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு, புலனாய்வுத் தகவல்கள் பரிமாறிக்கொள்ளல், பயங்கரவாத நிதிக் கொடுக்கல் வாங்கல்களை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பு மூலம் பிராந்தியத்தின் அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஊக்குவிக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷுடனான வர்த்தக உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# எதிர்ப்பு போராட்டங்கள் மூலம் ஐ.நா பணியாளர்களுக்கு ஆபத்து ஏற்படாது

## லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

நிபுணர்குழு அறிக்கைக்கு எதிரான போராட்டங்களின் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களுக்கு ஆபத்து ஏற்படாது என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்புக் கிளையில் பணியாற்றி வரும் தனிநபர்களின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஐக்கிய நாடுகளின் நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக பாரிய போராட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

இந்தப் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி எந்தத் தனிப்பட்ட நபர்களையும் இலக்கு வைத்து நடத்தப்பட மாட்டாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களுக்கு அரசாங்கம் போதியளவு பாதுகாப்பை வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு உத்தியோகபூர்வமாக வெளிவிவகார அமைச்சின் ஊடாக கோரியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்பட்டால் தங்களையும் ஆவணங்களையும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பணியாளர்களுக்கு ஏற்கனவே அந்த அமைப்பு பயிற்சி வழங்கியுள்ளது.

(ஸ்ரீ-2)

# அம்பாறை மாவட்டத்தில் பத்தாயிரம் வீட்டுத்தோட்டங்கள் அமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் 10 ஆயிரம் வீட்டுத் தோட்டங்கள் அமைக்க கிழக்கு மாகாணசபை ஏற்பாடு செய்து வருகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினுடைய 10 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை அமைக்கும் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகள், மதவழிபாட்டுத் தலங்கள் மற்றும் ஏனைய அரச அலுவலகங்களில் 10 ஆயிரம் வீட்டுத் தோட்டங்கள் அமைக்கப்படவுள்ளன.

மனைப்பொருளாதார அபிவிருத்தித் திட்டமான திவிநெகும திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. (ஸ்ரீ-2)

# வெளிநாடுகளில் இருந்து திரும்புவோரிடம் இரத்தப்பரிசோதனை மேற்கொள்ள தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புவோரை இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதார அமைச்சின் மலேரியா ஒழிப்பு பிரிவு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் மலேரியா நோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கத்துக்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இப்பரிசோதனை மூலம் மலேரியா நோய்க்குள்ளாகி இருப்பவர்களுக்கு இலவசமாக உரிய சிகிச்சை அளிப்பதற்கும் முடிவு செய்திருப்பதாக மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எல். தெனியகெ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டில் 684 பேர் மலேரியா நோய்க்கு உள்ளாகினர். இவர்களில் 52 பேர் வெளிநாடுகளில் இருந்து வந்த உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் அடங்கியுள்ளனர்.

இதனால் மலேரியா நோயுடன் நாட்டுக்குள் வருபவர்களை விமான நிலையத்திலேயே இனங்கண்டு சிகிச்சை அளிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மலேரியா நோய் பெரிதும் பரவியுள்ள நாடுகளுக்கு பயணம் செய்யும் இலங்கையருக்கு அதனைத் தவிர்ப்பதற்குரிய மருந்து வகைகளை முன்கூட்டியே இலவசமாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)


இசைநிலா இசைக்குழுவுடன் இணையுங்கள்







அற்புதத் தலைவர் அமைச்சர் ஐயாவின் ஆதரவுடன் வெற்றிகரமான இசைப் பயணத்தில்

மாண்புமிகு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களாலும்,
அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களாலும் கௌரவிக்கப்பட்ட
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கிருஷ்ண கீதம், பாடல்கள் மற்றும் தென்னிந்திய சினிமாபுகழ்
முன்னணிப் பாடகர், யாழ். வடமராட்சி ஈழத்து இளைய சௌந்தர்ராஜன்
V.அருள்ஜோதியின்

இசைநிலா இசைக்குழுவின் இசையருவி

உங்கள் மகிழ்ச்சிக்கு எங்கள் நிகழ்ச்சி. இசையை ரசிப்போம் இசையால் இணைவோம்.
கொழும்பு மற்றும் இந்திய இசைக்குழுக்களை அழைத்துவர ஏற்பாடு செய்துதரப்படும்.

(4655)

தொடர்புகளுக்கு:

புனித நகர், கற்கோவளம், பருத்தித்துறை.
P.சம்யுத்தன், குச்சம்லேன், வல்வெட்டித்துறை.
அன்னம்ஸ் இசைக்கருவிநிலையம், 118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0776648790
0750493011
0213735673

# 'கர' வருடம் உங்களுக்கு எப்படி?




(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்)

தொழிலில் வளர்ச்சி கூடிவரும்! தொல்லைகள் அனைத்தும் ஓடிவிடும்!

வேகத்தைக் காட்டிலும் விவேகம் அதிகம் கொண்ட மகரராசி நேயர்களே!

சுக்ர பலத்தோடும், குருமங்கல யோகத்தோடும் பிறந்த இந்தப் புத்தாண்டில் உங்களுக்குப் பொருளாதார நிலை திருப்திகரமாக அமையும். புகழ் மேலோங்கும்.

ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சந்திரன் சஞ்சரிக்கிறாரே என்று கவலைப்படவேண்டாம். அது மட்டுமல்லாமல், தொடக்கத்திலேயே இராசிநாதன் சனி வக்ரம் பெற்று செவ்வாயால் பார்க்கப்படுகிறார். மனிதர்கள் பலம் இழக்கும்பொழுது. மருந்துகளையும் மாத்திரைகளையும் சாப்பிட்டு உடலைத் தேற்றிக்கொள்வது போல, கிரகங்கள் பலம் இழக்கும்போது, அதற்கு அபிஷேக, ஆராதனைகள் நடத்தி, அர்ச்சனைகள் செய்து வழிபட்டால் நிச்சயம் நற்பலன்களை வழங்கும் என்பது முன்னோர்களின் நம்பிக்கை.

ஆண்டின் தொடக்கத்தில் நவக்கிரகங்களில் மூன்று கிரகங்கள் உங்களுக்கு நற்பலனைத் தரும் விதத்திலும் மற்ற ஆறு கிரகங்கள் வழிபாட்டால் வளர்ச்சியைக் கொடுக்கும் விதத்திலும் உலா வருவதால், ஆண்டின் தொடக்க நாளிலேயே விநாயகப் பெருமானையும் வழிபட்டு, நவக்கிரகத்தையும் வழிபட்டு வாருங்கள்.

சந்திராஷ்டமத்தோடு ஆண்டு பிறப்பதால், வரவைக் காட்டிலும் செலவுகள் கொஞ்சம் கூடலாம். எனவே, ஆதாயம் வரும்பொழுதெல்லாம் அதை பொருட்களாக்கி வைத்துக்கொள்ளுங்கள். தேச நலனுக்காக செலவிடும் சூழ்நிலையை வக்ரசனி கொடுக்கலாம்.

குருப்பெயர்ச்சிக்குப் பின் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். மூடிக் கிடந்த தொழிலுக்கு திறப்புவிழா காண்பீர்கள். முன்னோர்களின் சொத்துகளால் ஒரு சிலருக்கு முறையான வருமானம் கிடைக்கும். விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இராகு விலகிய பின்னர் சேமிப்புகள் அதிகரிக்கும். திடீர் திடீரென வரவுகள் வந்து சேரும்.

விருச்சிக இராசி சஞ்சரிக்கும் நேரம், இடபத்தில் சஞ்சரிக்கப் போகும் கேதுவின் ஆதிக்கத்தில் பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். கேது ப்ரீதியை முறையாகச் செய்தால் வாதிட்டவர்கள் கூட வந்து நின்று சரணடைவர்.

சனியின் வக்ர இயக்கம் மாறினால் உடல்நலம் சீராகும். அதுவரை மருத்துவச் செலவுகள் கூடுவதைத் தவிர்க்க இயலாது. அந்த இராசிநாதன் சனி, தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது தொழில் வளம் மேலோங்கும்.

**உதவிக்கரம் நீட்ட ஓடோடி வருபவர்கள்!**

பதவிக்கு ஆசைப்படாமல் உதவிக்கு ஆசைப்படுபவர்கள் நீங்கள். பக்கபலமாக இருப்பவர்களைப் பகைத்துக் கொள்ளமாட்டீர்கள். இருந்தாலும், பக்கத்து வீட்டார்களுடன் பகை திடீர் திடீரென வந்துகொண்டே இருக்கும்.

உங்கள் இராசிநாதனாக சனி அமைகிறார். அவரை மந்தன் என்று அழைப்பது வழக்கம். எனவே, நீங்கள் மந்தகதியில் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் மகத்தாக முடித்துக்காட்டுவீர்கள்.

**அர்த்தாமஷ்டக் குருவின் சஞ்சாரம்!**

கர வருடத் தொடக்கத்திலேயே 08.05.2011 அன்று குரு பகவான் உங்கள் இராசிக்கு நான்காமிடத்தில் அர்த்தாமஷ்டக் குருவாகச் சஞ்சரிக்கப் போகிறார். அது ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்களையும் வாகனத்தில் தொல்லைகளையும் வழங்குமிடந்தான் என்றாலும், அதன் பார்வை பதியும் இடங்களான 8, 10, 12 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன அல்லவா?

எனவே, குருவின் பார்வை பதியும் இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் நற்பலன்களைப் பெறப்போகின்றன. வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருமானம் அனைத்தும் செலவாகி விட்டதே! சேமிப்பு அனைத்தும் கரைந்துவிட்டதே! என்று கவலைப்பட்டவர்கள் இனி மகிழ்ச்சியடையும் விதத்தில் இழப்புகளை ஈடு செய்ய வாய்ப்புகள் உருவாகும்.

தொழில் வளர்ச்சி கூடும். தொழில் நடைபெறப் போதிய பணம் தர யாரும் முன் வரவில்லையே என்று ஏங்கியவர்கள் அரசு வழி அனுகூலம் பெறுவர். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். போட்டியின்றி தொழில்கள் நடைபெறும்.

*"நான்கினில் குருதான் வந்தால்*
*நடந்திடும் தொழில்கள் மாறும்!*
*வீண்பழி சிலருக்குச் சேரும்*
*வியாதிகள் அகன்று ஓடும்!*
*தூணெனத் தோள் கொடுத்தோர்*
*தொடர்பிலே மாற்றம் காண்பர்!*
*வானவருக்கு அரசை நீங்கள்*
*வழிபட்டால் வளர்ச்சி கூடும்!"*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் போது, அர்த்தாமஷ்டச் சனிக்கு என்ன பலன் ஏற்படுமோ அதைப்போலவேதான் அர்த்தாமஷ்டக் குருவுக்கும் பலன்கள் ஏற்படும்.

தொழிலில் விழிப்புணர்ச்சி தேவை. வீண்பழி ஏற்படாமல் இருக்க பிறரை விமர்சிக்காமல் இருப்பது நல்லது. ஆரோக்கியக் குறைபாடு அகலும். நண்பர்களில் சிலர் உங்களை விட்டுப் பிரியலாம். புதியவர்கள் வந்திணைவர். மன அமைதி கிடைக்கவும் மகிழ்ச்சியான வாழ்வு அமையவும் தென்முகக் கடவுளை திருப்தியாக வழிபாடு செய்வது நல்லது. மஞ்சள் வண்ண அஸ்திரம் அணிவித்து, முல்லைப்பூ சூட்டி, சுண்டல் நைவேத்தியமிட்டு குருவைக் கொண்டாடினால் அதன் அருட்பார்வையால் அனைத்துக் காரியங்களும் துரிதமாக நடைபெறும்.

**இராகு,கேது பெயர்ச்சிக்காலம்!**

இதுவரை உங்களின் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு இனி இலாப ஸ்தானத்திலும் இதுவரை ஆறாமிடத்தில் சஞ்சரித்து வந்த கேது இனி 5ஆம் இடத்திலும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இந்த நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி நிகழவிருக்கிறது.

இராகுவைப் போல கொடுப்பானும் இல்லை என்பது பழமொழி. அப்படி கொடுக்கும் இராகு இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இனி கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுப்பார். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொகை வந்து கொண்டே இருக்கும். எப்படி தொழிலை விரிவுபடுத்துவது என்று நினைத்திருந்த உங்களுக்கு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.

ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கப் போகும் கேதுவின் பலத்தால் பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். மண், பூமி வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். ஆலய திருப்பணி செய்ய முன்வருவீர்கள்.

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். இராகு-கேதுக்களால் நற்பலன் பெற நாகவழிபாடும் சர்ப்ப சாந்தியும் தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோவில்களில் செய்வது நல்லது.

**சந்தோஷம் தரும் சனிப்பெயர்ச்சி!**

இதுவரை ஒன்பதாமிடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் 21.12.2011 அன்று பத்தாமிடமான தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் பத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். நட்பு வட்டாரத்தில் நம்பிக்கைக்குரியவர்கள் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர்.

உடல் சோர்வும் மனச் சோர்வும் அகலும். எதிர்பார்த்திருப்பவர்களுக்கு ஊதிய உயர்வும் உத்தியோக உயர்வும் வந்துசேரும். வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு விருப்ப ஓய்வில் தொழில் தொடங்குவோர் சுய ஜாதகம் பலம் பெற்றிருந்தால் தொடங்கலாம்.

பத்தாமிடம் கர்ம ஸ்தானம் என்பதால் பத்தில் சனி வரும் பொழுது பெற்றோர்களின் உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சனி வழிபாடு சஞ்சலம் தீர்க்கும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

ஆண்டின் தொடக்கத்தில் சனி வக்ரம் பெறுகிறார். அதன் பின்னரும் தை மற்றும் பங்குனி மாதத்திலும் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர இயக்கம் அவ்வளவு நல்லதல்ல.

இராசிநாதன் வக்ரம் பெறும் பொழுது உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். மருத்துவச் செலவு கூடும்.

சிவல்புரி சிங்காரம்


இடமாற்றம், வீடுமாற்றம், இலாகா மாற்றம் போன்றவைகள் ஏற்படும்.

என்ன மாற்றம் வந்தாலும் அதை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது. சகோதரர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். 31.08.2011 முதல் 15.12.2011 வரை குரு வக்ரம் பெறும் பொழுது ஓரளவு நற்பலன்கள் உங்களுக்குக் கிடைக்கும். 3, 12 இற்கு அதிபதி வக்ரம் பெறும்பொழுது முன்னேற்றத்தின் முதல் படிக்கு கொண்டு போய் சேர்க்கும். சனியின் வக்ர காலத்தில் சனி பகவானையும் குருவின் வக்ர காலத்தில் தட்சணாமூர்த்தியையும் வழிபட்டு வருவது நல்லது.

**பலன் தரும் பரிகாரம்**

சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

(தொடரும்)



யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டை வைத்தியசாலையில் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. திரு., திருமதி. பாலசுப்பிரமணியம் தம்பதியரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மூக்குக் கண்ணாடி ஒன்றை அணிவித்துப் பரிசோதிப்பதைப் படத்தில் காணலாம்.

## பூந்தமல்லி முகாமிலுள்ள இலங்கை அகதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

தமிழகத்தின் பூந்தமல்லி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை அகதிகள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

இலங்கையில் இருந்து எவ்வித ஆவணங்களும் இல்லாது சட்டவிரோதமான முறையில் இந்திய எல்லைக்குள் பிரவேசித்ததாகக் கூறி வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளான நான்கு கைதிகளே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு பல வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் தங்கள் வழக்கை விரைவாக விசாரித்து முடிக்குமாறும் அதுவரை தங்களை பிணையில் வெளியில் விடுமாறும் கோரிக்கை வைத்து அவர்கள் இதுவரை பல தடவைகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.


கடைசியாக மூன்று மாதங்களுக்கு முன் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது மிக விரைவில் விடுதலை செய்யப்படுவீர்கள் என்று அதிகாரிகள் கொடுத்த வாக்குறுதியை நம்பி உண்ணாவிரதத்தை கைவிட்டனர்.

ஆயினும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் பிரஸ்தாப அகதிகள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்

(5)



இந்நாட்களிலும் பொற் கொல்லரைப் பத்தர் என்று கௌரவமாகக் குறிப்பதுண்டு. தமிழ்ப்பிராமியில் ஒற்றுகள் இரட்டிப்பதில்லை: என்பதால் பதன் என்பது பத்தன் என்பதையே குறிக்கின்றதெனக் கொள்ளமுடிகின்றது. பகரம் பிராகிருதத்திலே ப$_3$கரமாவதால் பத்தன் என்ற தமிழ்ச் சொல் பிராமிச்சாசனங்களில் ப$_3$த என மாற்று வடிவம் பெறுவது இயல்பாகும்.

### தென்னிலங்கை நாணயங்களிலே தமிழ்ப்பெயர்கள்

சில வருடங்களுக்கு முன்பு தென்னிங்கையில், அகுறுகொட என்னும் இடத்திலே கி.மு இரண்டாம் முதலாம் நூற்றாண்டுகளுக்குரிய நாணயங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பலவற்றிலே பெயர்கள் பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. அப்பெயர்களிற் சில தமிழ்ப் பெயர்கள். அப்பெயர்களும் அன் என்னும் விகுதியுடன் அமைந்தவை. அப்பெயர்கள் மேல் வருவனவாகும்.

இப் பெயர்கள் அனைத்திலும் காணப்படும் இறுதி எழுத்து தமிழ் பிராமிக்குரிய னகரமாகும்; எனவே, இப்பெயர்கள் தமிழ்பெயராகும்; அவை தமிழரின் பெயர்கள். இரண்டு பெயர்களில் அன்விகுதி தனிச் சொல்லாக வருகின்றது. விகுதியை அவ்வண்ணமாக எழுதும் வழமை தமிழகத்து பிராமிச் சாசனங்களிற் காணப்படுகிறது. குறுநில மன்னராகவும் வணிகராகவும் விளங்கிய தமிழர் இந் நாணயங்களை வழங்கியிருத்தல் வேண்டும். இந் நாணயங்கள் மூலம் இலங்கைத் தமிழரின் புராதன வரலாறு ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. துட்டகாமினி உருகுணையிலிருந்து தென்கிழக்குக் கரை வழியாகப் படையெடுத்து அநுராதபுரம் நோக்கிச் சென்றபொழுது 32 தமிழரசை வெற்றி கொண்டமை பற்றி மகாவம்சம் குறிப்பிடுகிறது. *சகஸ்ஸவத்துப்பக்கரண* என்னும் பாளிமொழி நூலும் இந்த விவரங்களைக் குறிப்பிடுகின்றது. நாகரிற் சிலர் உயர் பதவியிலிருந்தமைக்கும் நாணயங்களிற் சான்றுண்டு. ஒரு நாணயத்திலே *சடணாகஸ* "சடநாகனது" என்று எழுதப்பட்டுள்ளது. சடநாகன் என்ற தமிழ்ப் பெயரைப் பிராகிருத மயப்படுத்திச் சடணாக என்று எழுதியுள்ளனர் போலத் தெரிகின்றது. ணாக என்பதில் முதலாவது எழுத்தான ணகரத்தை நகரத்திற்குப் பதிலாகவும் இரண்டாவது எழுத்தான க$_3$கரத்தை 'க' எனவும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்னிலங்கையில் வாழ்ந்த நாகரிடையே தமிழ், பிராகிருதம் என்னும் மொழிகளின் கலப்பு ஏற்பட்டமைக்கு இது நல்ல உதாரணமாகும். வேறொரு நாணயத்திற் காணப்படும் சொற்களால் இது மேலும் உறுதியாகின்றது.

**திஸபுரா தா (ட்)ட ணாகரசந்**

என்ற சொற்கள் ஒரு நாணயத்தில் எழுதப்பட்டுள்ளன. நாகன் ஒருவனுடைய பெயர் இதிற் காணப்படுகின்றது. அவனது பெயர் தா(ட்)டன் ஒற்று பிராகிருதத்தில் இரட்டிப்பதில்லை என்பதால் தாட்ட(ன்) என்பதை தாட(ன்) என்று எழுதியுள்ளனர். சொற்கள் அம்மொழியில் மெய்யெழுத்துக்களில் முடிவதில்லை என்பதால் தாட்டன் என்ற பெயரின் ஈற்றெழுத்தான னகர மெய்யும் மருவிவிட்டதென்று கொள்ளலாம். ணாக என்பதை அடுத்து *ரசந்* என்ற எழுத்துக்கள் உள்ளன. ராசன் என்பதே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. என்பது அவற்றைப்பற்றிய யதார்த்த பூர்வமான விளக்கமாகும். பிராமியில் நெடிலைக் குறிலாக எழுதும் வழக்கமுண்டு. அதன் அடிப்படையில் ர என்பதை *ரா* என்றும் கொள்ளமுடிகிறது. *நகர னகர* மயக்கம் சாசன வழக்கிலே வழமை என்பதால் இறுதியான ந



பெரும்பதன்கல்
"பொற்கொல்லர்தலைவனின்(உரை)கல்"


என்னும் எழுத்தை னகர மெய்யாகக் கொண்டு சொல்லை *ராசன்* என்று அனுமானித்துக்கொள்ளலாம். *ராசன்* என்பது *ராஜா* பிராகிருத/ சமஸ்கிருத சொல்லுக்கு இணையானது. எனவே குறிப்பிட்ட நாணயம் *திஸபுர* என்னும் ஊரிலிருந்து ஆட்சிபுரிந்த தாட்டன் என்னும் நாக அரசனால் வெளியிடப் பெற்றமை தெளிவாகின்றது. நாகரிடையிலே தமிழ் மொழி வழங்கியதற்கும் நாகர் சிற்றரசராக விளங்கியதற்கும் இந்நாணயத்திற் பதிவாகியுள்ள சொற்கள் ஆதாரமாகின்றமை குறிப்பிடத்தக்கது. பழங்குடிகளான நாகரைப் பற்றியும் அவர்களின் ஆட்சிப் புலங்கள் பற்றியும் மகாவம்சமும் குறிப்பிடுகின்றது. வடஇலங்கையிற் போலத் தென்கிழக்கிலங்கையிலும் நாகர் குடியிருப்புக்களையும் ஆள்புலங்களையும் ஏற்படுத்தியிருந்தனர். *மட்டக்களப்பு பூர்வசரித்திரமும்* மட்டக்களப்புத் தேசத்து பழங்குடியினருள் நாகரை முதன்மைப்படுத்துகின்றமை குறிப்பிடற்குரியது.

### இந்நூல்

இலங்கைத் தமிழ் சாசனங்கள் என்னும் இந்நூல் 13ஆம் நூற்றாண்டு வரை இலங்கையில் எழுதப்பட்ட சிலசாசனங்களைப்பற்றியது. சாசனங்கள் தேசத்து மக்களிடையே வழங்கிய மொழியின் இயல்புகளைப் பதிவு செய்கின்ற ஆவணங்களாகும். அதனால் மொழிவரலாறு பற்றிய மூலங்களில் அவை முதன்மை பெறுகின்றன. இலங்கையில் வளர்ச்சி பெற்ற தமிழ் மொழியின் வரலாற்றையும் அதன் சிறப்பியல் புகளையும் ஆராய்ந்து அறிவதற்கு சாசனங்கள் அடிப்படையானவை. சொல்வளம், சொல்லாக்கம், வசனங்களின் அமைப்பு, பிற மொழிச்செல்வாக்கு அகிய அம்சங்களை அவற்றின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

ஈழத்துச் சாசனங்களிற் பொது வழக்கான மொழிநடையின் அம்சங்களும் இலக்கிய நெறிக்குரிய அம்சங்களும் கலந்துள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். சில சாசனங்களின் பகுதிகள் செய்யுள் வடிவமானவை. வேறு சில சாசனங்கள் முழுமையும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. சாசனவாசகங்களை உருவாக்கியவர்களிற்பலர் இலக்கிய நெறிபயின்றவர்கள்; செய்யுள் இலக்கணங்களை அறிந்தவர்கள் கவிதை புனையும் ஆற்றல் உடையவர்கள்.


வரிவடிவ வளர்ச்சி, சொல்லாட்சி, எழுத்து- ஒலி அமைதிகளின் மயக்கம் என்பவற்றைப் பொறுத்தவரையில் 13ஆம் நூற்றாண்டு வரையான காலத்து இலங்கைத் தமிழ் சாசனங்களுக்கும் தென்னிந்தியச் சாசனங்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காணமுடியவில்லை. ஈழநாட்டிலே தமிழ்மொழியின் வளர்ச்சியிலே தொடர்ச்சியாகவும் மிகுந்த அளவிலும் தென்னிந்தியச் செல்வாக்கு ஏற்பட்டமையினைச் சாசனங்கள் பிரதிபலிக்கின்றன. அக்கால நிலைகளைப் பொறுத்தவரையில் இது இயல்பான



உதிரன்[13]




தஸபி(ட்)டன்[14]



மகாசாத அன்

கபதிகடப அன்(படமில்லை)



திஸபுர தாட ணாக ர(ா) சந்

ஒன்றாகும். "தொடுகடல்" வழியான வாணிபத்திலும் கடல் வழிப்பிரயாணங்களிலும் ஈழத்தமிழரும் தென்னிந்திய மக்களும் கட்டுப்பாடுகளின்றிப் பங்கு கொண்டனர். கடல்வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புக்களும் உரிமைகளும் அவர்களுக்குப் பொதுமையானவை. இலங்கையின் வட, வடமேற்கு, கிழக்குப் பகுதிகளிற் பூர்வீகமான தமிழ்க் குடிகளோடு காலாகாலம் தென்னிந்தியாவிலிருந்து சென்றவர்கள் கூடிக்கலந்துவிட்டனர். பல்லவரதும் சோழப் பேரரசரதும் காலங்களில் இத்தகைய தொடர்புகள் முனைப்புப் பெற்றன.

வரலாற்று மூலங்கள் என்ற வகையிலே தமிழ்ச் சாசனங்களின் சிறப்புகள் பலவாகும். அவற்றிலே *மகாவம்சம்* முதலான நூல்களிலும் சிங்கள மொழிச்சாசனங்களிலும் இடம்பெறாத பல விபரங்கள் பதிவாகியுள்ளன. முதலாம் மானாபரணன், முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு முதலியோரைப்பற்றிய முக்கியமான சில விபரங்கள் தமிழ்ச் சாசனங்களிலே காணப்படுகின்றன. பொலன்னறுவை ராசதானியிலும் பிறநிர்வாக நிலையங்களிலும் உயர் பதவிகளில் இருந்த தமிழ் பிரதானிகளைப்பற்றி அவற்றின் மூலமே அறிய முடிகின்றது. தமிழ்ப் படைகள் சிலவற்றின் பெயர்களும் அவற்றின் தலைவர்களின் பெயர்களும் அவற்றிலே பதிவாகியுள்ளமை தமிழ்ச்சாசனங்களின் மற்றுமோர் அம்சமாகும். பலகோயில்களின் பெயர்களும் பௌத்த பெரும் பள்ளிகளின் பெயர்களும் அவற்றைப்பற்றிய விபரங்களும் அவற்றிலே காணப்படுகின்றன.

இலங்கைத்தமிழரின் சமூக - பண்பாட்டு வரலற்றை மீட்பதற்கான அடிப்படை மூலங்கள் என்ற வகையிற் சாசனங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. *கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்* போன்ற நூல்களைப் பற்றிய புரிந்துணர்வு, சாசனங்கள் மூலமாக ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையில் இச்சாசனங்கள் கணிசமான முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றிலே பதிவாகியுள்ள விபரங்களைக் கருத்திற் கொள்ளாதவிடத்து தேச வரலாற்றை முழுமையாகவும் நிதானமாகவும் சரியாகவும் அறிந்து கொள்ள முடியாது.


இலங்கையிலே பௌத்த சமயத்திற்கும் தமிழருக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டிருந்தமை சாசனங்கள் மூலமாகத் தெளிவாகின்றது. அத்தொடர்பும் புராதனகாலம் முதலாக நிலைபெற்று வந்த ஒன்றாகும். பிராமிச்சாசனங்கள் குறிப்பிடும் தமிழர் எல்லோரும் பௌத்த சமயத்திற்கு ஆதரவு புரிந்தவர்கள் என்பது குறிப்பிடற்குரியது.தமிழ்ச் சாசனங்களிற் சில தமிழரின் ஆதரவுபெற்ற தமிழ்ப் பௌத்தர்களுக்குரிய பள்ளிகளைப் பற்றியவை. அநுராதபுரத்து மாக்கோதைப்பள்ளி, பெரியகுளத்து (திருகோணமலை) ராஜராஜ-பெரும்பள்ளி, மயிலன் குளத்து (திருகோணமலை) விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி, மாங்கனாய் (திருகோணமலை) வெய்கவேரம், பதவியாவில் அமைந்த வேளைக்காற விகாரம் முதலான பௌத்த பள்ளிகள் பற்றித் தமிழ் சாசனங்கள் மூலமாகவே அறிய முடிக்கின்றது.


தமிழ்வணிகத்தவரால் அமைக்கப்பட்ட பெரும்பள்ளிகள் வேறொரு வகையானவை. அநுராதபுகரத்து மாக்கோதைப்பள்ளி ,மாகலான விக்கிரம சலபமேகபுரத்து *ஐந்நூற்றுவன்பள்ளி,* வெலிகந்தையிலிருந்த ஐந்நூற்றுவன் பெரும்பள்ளி

**பேராசிரியர் சி.பத்மநாதன்,**
**B.A, Ph.D, LFIBA**

என்பன அத்தகையன வாகும். அட்டமத்தானங்களில் ஒன்றாகிய ருவன் வெலிசய ஜகதப்பகண்டன் பள்ளியானமை வேறொரு வரலாறாகும். பௌத்த சங்கத்தாரிடையே தமிழ் மொழி பயின்று அதிற்புலமை பெற்றபலர் சங்கத்திலே சேர்ந்திருந்தனர் என்பதைப் பாண்டு வாஸநூவர, லங்காதிலக போன்ற தளங்களில் உள்ள சாசனங்கள் மூலமாகவும் அறிய முடிகின்றது. அநுராதபுரத்து நான்கு நாட்டாரின் சாசனம் தர்மபாலர் என்ற துறவியின் சிறப்புக்களை போற்றும் பாடல் ஒன்றைப் பதிவு செய்துள்ளது. இலங்கையில் இந்து சமயம் தொடர்பான ஆய்வுகளிற் சாசனங்கள் பெறும் சிறப்பிடத்தை இலங்கை இந்துக்கலாசாரம் என்ற நூலிலே தெளிவுபடித்தியுள்ளோம்.

(தொடரும்)





"நாம் பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம்" என்ற மகிந்த சிந்தனை திட்டத்திற்கமைய வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மாணவர்கள் வீட்டிலும் பாடசாலைகளிலும் நடுவதற்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு புத்தாண்டு தினத்தன்று யா/வட்டு. இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விவசாய ஆசிரியர் சி. பாலகிருஷ்ணன் உரையாற்றுவதனையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட்டு. அபிவிருத்திக்கழகப் பணிப்பாளர் சௌந்தரராஜன் மாணவர் ஒருவருக்கு மரக்கன்று வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதியை கொலை செய்ய முற்பட்டதாக கைதானோர் தொடர்ந்து விளக்கமறியலில்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்ய முற்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஐந்து பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கல்கிஸ்ஸ மேலதிக நீதிவான் ருவிர வெலிவத்த முன்னிலையில் சந்தேகநபர்கள் இராணுவத்தின் லெப்ரினண்ட் கேணல் ஒருவர் உள்ளிட்ட ஐந்து பேர் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து அடுத்த மாதம் நான்காம் திகதிவரை அவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டிருந்த வைத்தியர் ஒருவர் உள்ளிட்ட மேலும் நான்கு சந்தேகநபர்கள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

2007ஆம் ஆண்டு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சி வளாகத்தில் வைத்து ஜனாதிபதியைக் கொலை செய்யத் திட்டமிட்டதாக சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (ஸ்ரீ-2)

## வேடவுடை ஒப்பனை களப் பயிற்சி

வேடவுடை ஒப்பனை களப்பயிற்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கு களனி பல்கலைக்கழக வளவாளர் பாலித அபேயலால் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-3)

# பாகிஸ்தானிலிருந்து 24 எரிபொருள் தாங்கிகள் இறக்குமதி

(கொழும்பு)

நாடு முழுவதும் எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடுகளுக்காக புதிய எரிபொருள் தாங்கிகளை இறக்குமதி செய்ய புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் 24 எரிபொருள் தாங்கிகளை பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக புகையிரதத் திட்டமிடல் பணிப்பாளர் விஜயசமரசிங்க குறிப்பிட்டார்.

இதற்காக 224 மில்லியன் ரூபா நிதி செலவாவதாகவும் புகையிரதத் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

புகையிரதத் துறையை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஓரங்கமாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவினால் இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இந்த எரிபொருள் தாங்கிகள் கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள எரிபொருள் தாங்கிகளை சேவையில் இணைத்துக் கொள்வதன் மூலம் ஒட்டு மொத்த எரிபொருள் விநியோகத்தை 70 வீதமாக உயர்த்திக் கொள்ள முடியும் என்று விஜயசமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

புகையிரதம் மூலமான எரிபொருள் விநியோகத்தை விஸ்தரிப்பதன் ஊடாக இந்த சேவையை எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றமடைய செய்ய முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நாட்டுக்கு எதிரான சதித்திட்டங்கள் தொடர்பில் எச்சரிக்கை தேவை

## ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டுக்கு எதிராக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும்சதித்திட்டங்கள் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டியது வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களின் பொறுப்பாகும்என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அந்நாட்டில் வாழ்கின்ற இலங்கையர்களை சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் அனைத்துப் பகுதி மக்களும் எந்த விதமான இன, மத பேதமின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். மூன்று தசாப்த கால பயங்கரவாதம் துடைத்தெறியப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழ்கின்ற அனைத்து இலங்கையர்களும் நாடு மற்றும் மக்கள் தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

## தேசிய வீடமைப்பு அதிகார சபையால்

# கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் இன்று கையளிப்பு

(கொழும்பு)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் இன்றையதினம் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி அறிவியல் நகரில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் சுமார் 10 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்த வீடுகள் இன்றைய தினம் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பயனாளிகளுக்கு கையளிக்கப்படவுள்ளன.

இதனிடையே இராணுவத்தினரின் ஏற்பாட்டில் புதுவருட விளையாட்டு போட்டி களும் இன்றைய தினம் கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கலாசார நிகழ்வுகளுடன் இடம் பெறும் இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வடமராட்சி வலய பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள்

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் வட மராட்சி வலயத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு;**

### பெண்களுக்கான போட்டிகள்

**15 வயதிற்குக் கீழ்ப்பட்டோர்**

**வலைப்பந்து**

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**கரப்பந்தாட்டம்**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/சென்.தோமஸ் றோ.க.த. பெண்கள் பாடசாலை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**கரம்**

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, யா/நெல்லியடி ம.ம.வி., யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**சதுரங்கம்**

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**17 வயதிற்குக் கீழ்ப்பட்டோர்**

**வலைப்பந்தாட்டம்**

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/நெல்லியடி ம.ம்.வி.

**கரப்பந்தாட்டம்**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/சென்.தோமஸ் றோ.க.த.பெண்கள் பாட சாலை, யா/நெல்லியடி ம.ம.வி.

**19 வயதிற்குக் கீழ்ப்பட்டோர்**

**எல்லே**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, யா/நெல்லியடி ம.ம.வி.

**கபடி**

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, யா/சென்.தோமஸ் றோ.க.த.பெண்கள் பாடசாலை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**வலைப்பந்தாட்டம்**

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**உதைபந்தாட்டம்**

யா/விக்னேஸ்வராக் கல்லூரி, யா/சென். தோமஸ் றோ.க.த. பெண்கள் பாடசாலை, யா/நெல்லியடி ம.ம.வி.

**கரப்பந்தாட்டம்**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/வல்வை மகளிர் மகா வித்தி., யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**கூடைப்பந்தாட்டம்**

யா/நெல்லியடி ம.ம.வி.

**மென்பந்துக் கிரிக்கெட்**

யா/நெல்லியடி ம.ம.வி., யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**சதுரங்கம்**

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**கரம்**

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

(முற்றும்)

# தனியார் ஓய்வூதிய திட்டம் தொடர்பான சட்டமூலத்திற்கு எதிராக நடவடிக்கை



## ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் தொடர்பான உத்தேச சட்ட மூலத்திற்கு எதிராக அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இணைந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்வதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேற்படி சட்டமூலம் இம்மாத ஆரம்பத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் மீதான விவாதம் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 75 இலட்சம் தனியார்துறை ஊழியர்களை அரசாங்கம் ஏமாற்ற முயற்சிப்பதாக ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊழியர்களுக்கு அரசாங்கம் நன்மைகளை வழங்க விரும்பினால் அரசாங்கம் அதன் சொந்தப் பணத்தை பயன்படுத்த வேண்டும். ஆனால், அவர்கள் ஊழியர்களின் சேமலாப நிதிய பணம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகி யவற்றை எடுத்து மீண்டும் தொழிலாளர்களுக்கு வழங்க முற்படுகிறார்கள். அப்படிச் செய்ய அரசாங்கத்துக்கு உரிமை இல்லை என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவதற்கு ஊழியர்கள் 10 வருடங்கள் பங்களிப்பு வழங்க வேண்டும். 9 வருடங்கள் அதை செய்தால் எதுவும் கிடையாது. அதனால்தான். இதை நாம் ஒரு ஏமாற்று நடவடிக்கை என்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பொலிஸ்-பயணியிடையே திருநெல்வேலியில் முறுகல்

திருநெல்வேலிப் பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் ஒருவருக்கும் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வீதிச் சோதனையில் ஈடுபட்டு வந்த பொலிஸாருக்கும் குறித்த பயணிக்கும் இடையில் கடந்த சில நாட்களாக முறுகல் நிலை இருந்து வந்துள்ளது.

வழமை போல் தனது பணிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபரை இடைமறித்த பொலிஸார் தினமும் கேட்பது போல மோட்டார் சைக்கிள் ஆவணங்களைக் காட்டுமாறு தெரிவித்தார். இதனையடுத்து குறித்த நபர் தினமும் என்னை மட்டும் மறித்து ஆவணங்களைக் கேட்பதற்கான காரணம் என்ன என பொலிஸாரிடம் கேட்ட போது இருவருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இந்த முரண்பாடு இறுதியில் பெரும் சண்டையாக உருவெடுத்தது. வீதியில் பஸ் ஒன்று கூடி இச்சம்பவத்தைப் பார்வையிட்டனர்.

பொலிஸார்- நபர் இடையில் தொடர்ந்து கருத்து மோதல் ஏற்பட்டது. இறுதியில் தனது தலைக்கவசத்தை நிலத்தில் அடித்து உடைத்து விட்டு மோட்டார் சைக்கிளையும் சம்பவ இடத்திலேயே போட்டுவிட்டு குறித்த நபர் பேருந்தில் ஏறிச் சென்றுவிட்டார். பொலிஸ் திணைக்களத்தால் பணிக்காக இறுதியில் இணைக்கப்பட்ட தமிழ் பொலிஸாருடனேயே இந்த முரண்பாடு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# லசந்த படுகொலை தொடர்பான தகவல்கள் விரைவில் வெளியிடப்படும்

## பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அறிவிப்பு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பான பல தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

லசந்த படுகொலை சம்பவம் தொடர்புடைய சந்தேக நபர்களின் தொலைபேசிகளை பரிசீலனை செய்ததன் மூலம் பல முக்கிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் கல்கிஸை நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான விரிவான அறிக்கை எதிர்வரும் காலங்களில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் பற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்தி விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு நீதிவான் நிரோஷா பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றைய தினம் 45 ஆவது தடவையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஆற்றில் குளித்துக்கொண்டிருந்த மாணவன் காணாமல் போயுள்ளான்

(கொழும்பு)

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாமகள் மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் கதிர்காமத்தில் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளதாக அதிபர் ரி.கோபாலபிள்ளை தெரிவித்தார்.

குறித்த பாடசாலையிலிருந்து 96 மாணவர்களும் அதிபர் அடங்கலாக நான்கு ஆசிரியர்களும் நான்கு நாள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு நேற்று முன்தினம் காலை பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மாலை செல்லக்கதிர்காமத்தில் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது நான்கு மாணவர்கள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இதில் மூவர் காப்பாற்றப்பட்ட போதிலும் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

குறித்த மாணவனை மீட்பதற்கான முயற்சிகளில் கதிர்காமம் பொலிஸார் ஈடுபட்டுள்ள தாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# புலி ஆதரவு அமைப்புகளை தடை செய்யுமாறு இலங்கை ஐரோப்பிய நாடுகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சகல அமைப்புகளையும் தடை செய்யுமாறு இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய நாடுகளிடம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்தபோதிலும், புலி ஆதரவு அமைப்புகளை தடைசெய்யவில்லை என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த போதிலும், ஐரோப்பிய நாடுகளில் புலி ஆதரவு அமைப்புகள் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இயங்கிவரும் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புகளைத் தடை செய்வது குறித்து அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் வாரத்தில் உத்தியோகபூர்வமான முறையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்கிவரும் அமைப்புகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை. (ஸ்ரீ-2)

# கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா

## மூன்றாம் நாள் நிகழ்வுகள்

(கொழும்பு)

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை, மாலை என இரு அமர்வுகளாக கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மூன்றாம் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் த.முத்துக்குமாரசாமி தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வின் தொடக்கவுரையை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

அத்துடன் ''கம்பனில் பெரிதும் வெளிப்படும் வள்ளுவத்தடம்...'' என்ற சுழலும் சொற்போர் இடம்பெறவுள்ளது. இதில் நடுவராக பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மாலை நேர அமர்வு 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் தலைமையுரையை கொழும்பு கம்பன் கழக செயலர் ஜெ.விஸ்வநாதன், தொடக்கவுரையை சேலம் மார்கழிப் பெருவிழா தலைவர் ஏ.கே.பழனியப்பன் ஆகியோர் நிகழ்த்துவார்.

அத்துடன் ''வானில் கம்பன் வடிக்கும் கண்ணீர்...'' என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெறவுள்ளது.

இக்கவியரங்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த கவி மாமணி அப்துல் காதர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# தனிப்பட்ட குறுகிய நலனுக்காக நாட்டை படுபாதாளத்தில் அரசு தள்ளியுள்ளது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேசத்துடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசாங்கம் மனித உரிமைகளை பாதுகாக்காமையானது, நிபுணர் குழு அறிக்கைக்கு வலுச் சேர்ப்பதாகவே அமைந்துள்ளது.

தனிப்பட்ட குறுகிய நலனுக்காக நாட்டை பாரிய பாதாளத்தில் அரசாங்கம் தள்ளிவிட்டுள்ளது என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில், உள்நாட்டில் மனித உரிமைகளும் ஜனநாயகமும் பாதிக்கப்பட்டுள்ளமையினால் சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களுக்கு வெளிப்படையாக பதில் கூற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, வீண் பேச்சுக்களை பேசாது இராஜதந்திர ரீதியில் செயற்பட்டு நாட்டுக்கு எதிராக உள்ள அச்சுறுத்தல்களை முறியடிக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார் பிளஸ் முழுக்காப்புறுதி அதிர்ஷ்டத்தில் வெற்றியீட்டிய ரி. மயில்வாகனம் என்பவருக்குரிய டிஜிற்றல் கமராவினை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். கிளையின் நிர்வாக உத்தியோகத்தர் ரி.ஏ. அஜித்குமார் வழங்குவதனையும் அருகில் அவ்வாகனத்திற்கு குத்தகை வசதி வழங்கிய பார்லிற் பினான்ஸ் அதிகாரி சிவகீர்த்தன் மற்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

# ஆனந்த அலை



## ஆன்மீகம் 32

### ஆனந்த அலையில் ஊறி விடுங்கள்

காசு பணம் வேண்டும் என்றால் நன்றாகப் புத்தி ஒடுகிறது. ஆனால் உயிர் என்றால் புத்தி ஓடாது. கொஞ்சம் மந்தமாக இருக்கும்.

இப்படியே ஒரு நாள் சங்கரன் பிள்ளை அலுவலகம் போனார். மிகவும் சோகமாக இருந்தார். அவர் முதலாளி அவரைப்பார்த்து "என்ன ஆயிற்று? ஏன் இப்படி ஆகிவிட்டீர்கள்" என்று கேட்டார். இல்லை இன்று காலை என் அம்மா இறந்து விட்டார்கள் என்று சொன்னார். அதற்கு முதலாளி "ஐயோ பாவம் இப்படி ஆகிவிட்டதே , எதற்கு நீங்கள் ஆபீசுக்கு வந்தீர்கள். வேண்டாம் வேலை செய்யவேண்டாம். லீவு எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார். அதற்கு சங்கரன்பிள்ளை எப்படியோ வந்துவிட்டேன். நான் வேலை முடித்து வீட்டுக்குப் போய்க்கொள்கிறேன். வீட்டில்போய் என்ன செய்யப்போகிறேன் என்றார். சரி முடிந்ததைச் செய்யுங்கள் என்று முதலாளி போய் விட்டார்.

சிறிது நேரத்திற்குப்பிறகு சங்கரன் பிள்ளைக்கு ஒரு தொலைபேசி வந்தது. அதை எடுத்து சங்கரன்பிள்ளை பேசினார். போனில் பேசிய பிறகு இன்னும் மிகவும் துன்பமாகிவிட்டார். அவர் முதலாளி அவரைப் பார்த்து இப்போது என்ன ஆயிற்று என்றார். இல்லை, என்தம்பி கூப்பிட்டான், அவனுடைய அம்மாவும் இறந்து போய்விட்டாராம். பாருங்கள் இப்படித்தான் வாழ்க்கை.

ஏதோ ஒன்று, இது இல்லையென்றால் அது தினமும் ஏதாவது ஒன்று இருக்கிறதா இல்லையா கஷ்ரப் படுவதற்கு? ஏதோ ஒன்று வேண்டும் உங்கள் அம்மா போய் விட்டார். சரி ஏதோ உங்களுக்கு கஷ்ரம். தம்பியுடன் அம்மாவும் போய்விட்டர்கள். இப்போது இரட்டிப்புத்துன்பம்தானே. நான்கு பேர் இருந்தால், நான்குமுறை அம்மா இறந்து விடுவார்கள். இந்த விதமாகத்தான் நம்முடைய சூழ்நிலைகளை நாமே மேலும்மேலும் துன்பமாக்கியவாறே இருக்கிறோம் இதை நிறுத்திவிட்டு இந்த ஆனந்த அலையில் நன்றாக நனைந்து விடலாமா? நனைந்தால் போதாது. ஊறி விட வேண்டும்.

### ஆனந்தம் எனும் தொற்றுநோய்

ஆனந்தம், துன்பம் இரண்டுமே தொற்று நோய்போலத்தான். ஜல தோசத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தும்மினாலே சுற்றியுள்ளோருக்கும் அது தொற்றிவிடுகிறது. துன்பம், ஆனந்தம் என்பதும் இப்படித்தானே? உங்கள் நகரில் எங்கே சென்றாலும் நீங்கள் ஆனந்தமான முகத்துடன் வளைய வரும்போது நம்முடைய ஆனந்தமான முகம் பார்க்கின்ற ஒவ்வொரு மனிதருக்கும் ஆனந்தம் தொற்றிக்கொண்டால், நகரமே நன்றாக இருக்குமா இல்லையா? மற்றவருக்காக இதை நாம் செய்யவில்லை என்றாலும் நமக்காக செய்துகொள்ளலாமா?

என்னையே எடுத்துக் கொள்ளுங்கள் நான் ஆனந்தமான நகரத்தில் இருக்க வேண்டும். ஆன்ந்தமயமான இடத்தில் இருக்கவேண்டும். நான் ஆனந்தமான உலகத்தில் வாழ வேண்டும் என்று எனக்கே பெரிய சுயநலம் உள்ளது. ஆகையினால்தான் இவற்றையெல்லாம் செய்கிறேன். இவற்றை நான் உங்களுக்காகச் செய்யவில்லை. எனக்கே நான் ஆனந்தமான உலகத்தில் வாழ வேண்டும் என்கின்ற ஆர்வம் இருப்பதனால் இப்படி எல்லாம் ஆனந்த அலை உண்டு பண்ணுகிறேன்.

### மனம் தற்செயலாக நடக்கக் கூடாது.

ஆனந்தம் என்பது தத்துவம் இல்லை. அது ஒரு கருத்து இல்லை. இது நான் சொல்லிக் கொடுக்கிற போதனை இல்லை. இது உயிருடைய அடிப்படையான நோக்கம். உயிர்த்தன்மையுடன் தொடர்பு இல்லாமல், மனதில் இருக்கிற குழப்பத்தில் சிக்கிப்போய் இருப்பதால், வெறுப்பு, கோபம், பதற்றம், பயம் இப்படித் தேவையில்லாதது எல்லாம் நம்மனதில் உருவாகிறது. உங்கள் பயம் உங்கள் மனதில் உருவாக்கப்படுகிறதா? இல்லை மேகத்தில் இருந்து இறங்கிவருகிறதா? இப்படித்தான் கோபம், பதற்றம் எல்லாமே. எதற்கு நமது மனம் நமக்கு எதிராக செயல் செய்கிறது? உடல் உருவாக்கின சக்தி, மனம் உருவாக்கின சக்தி இரண்டுமே நமக்குள்ளேதானே இருக்கிறது. அதனோடு தொடர்பு இல்லாமல் வாழ்க்கையை வாழ்வதற்கு முயற்சி செய்தால் வாழ்க்கை தற்செயலாத்தானே நடக்கும். உங்கள் விருப்பப்படி நீங்கள் வாழவில்லை. வாழ்க்கை அதன்பாட்டிற்கு நடக்கிறது.


உங்கள் விருப்பப்படி வாழவிரும்பும்போது கோபம்,பயம்,பதற்றம் இவற்றை உருவாக்கிக் கொள்வீர்களா? தற்செயலாக இப்போது இருப்பதை நமக்குத்தேவையான மாதிரி உருவாக்கிக்கொள்ள முடியாதா? ஒருஅளவுக்காவது உருவாக்கமுடியும். அதற்கு உங்கள் மனம் நீங்கள் சொல்லும்படி நடக்கவேண்டும் அது தற்செயலாக நடக்கக் கூடாது.

உங்களுக்கு வரும் பிரச்சினைகளும் சூழ்நிலைகளும் உங்களுக்கு வெளியே, குடும்பத்திலிருந்து, சாலையிலிருந்து அல்லது தொழிலிலிருந்து வரலாம். ஆனால் பயம், பதற்றம் போன்றவை உங்களுக்கு எங்கிருந்து வருகிறது. அது நீங்கள் உருவாக்கியது தானே? இதைமட்டும் நிறுத்திவிட்டால் உள்நிலையில் உங்களுக்கெதிராக நீங்களே உருவாக்குவதை நிறுத்திவிட்டால் எப்போதும் ஆனந்தமாக இருக்கமுடியும். உள்நிலையில் ஆனந்தத்தை உருவாக்கிக்கொண்டால் அதற்குப்பிறகு வெளிநிலையில் ஏதேனும் பாதிப்பு நிகழ்ந்தால் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவுக்கு பாதிப்பை தடுத்துக்கொள்ளமுடியும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்த தவறிய தமிழர் சமுதாயம்

**03**



பாரதி தமிழ்கவிதையை ஜனநாயகப்படுத்தினான். ஜனநாயகப் படுத்தப்பட்ட இலக்கியத்தின் நாயகர்களாகப் பொதுமக்களைக் கொண்டு வந்தான். அதுவரைகாலமும் தமிழ் இலக்கியங்களில் இடம்பெறாதிருந்து வந்த சாமானியமக்கள் வாழ்வு நிலைமைகளை இலக்கியங்களுக்கு ஊடாக வெளிப்படுத்தினான்.

"கரும்புத்தோட்டத்திலே- அவர் கால்ளும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்துகின்றனரே...! எனத் தொழிலாளர் படும் துயரத்தினை இலக்கியத்தில் பதிவு செய்தான்.

"வாழைப்பழக்கடை வைப்பவரேனும்..." எனத் தொழில்களின் அந்தஷ்தை உயர்த்திக்காட்டினான்.

"சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்"

எனும் இழிதொழிலாகப் பலராலும் ஒதுக்கப்பெறும் சுத்திகரிப்புத் தொழிலை ஒரு கலையாக்கி அதனை அனைவரும் கற்று அத்தொழிலைச் செய்வோம் என்கின்றான்.

"எல்லோரும் ஓர் குலம்எல்லோரும் ஓர் இனம்

எல்லோரும் ஓர் நிறைஎல்லோரும் ஓர் விலை

எனச் சமூகச் சமத்துதுவக் கருத்தினை கவிதை இலக்கியமாக ஓங்கி ஒலித்தான். நடைமுறையில் இருக்கின்ற சமுதாயதிணை இலக்கியத்திற்கு ஊடாக வெளிக்கொணடு வந்த துடன், சமுதாயம் எப்படி அமைய வேணடும் எனபதையும் எதிர்வு கூறினான்.

தமிழ் இலக்கியங்கள் சாதாரண பொதுமக்கள் பற்றிப் பேசாது மௌனம் சாதித்தது மாத்திரமல்லாது பாடல்களைப்பாடிய புலவர்களுக்கும் மேட்டுக்குடி மனப்பாங்குடன் இருந்து வந்திருக்கிறார் கள். சமூக்கட்டமைப்பும் இலக்கியப் போக்கும் அத்தகைய மனப்பாங்கினைக் கொண்டுவந்தமைக்கு அடிப்படைக் காரணங்களாக

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

இருந்திருக்கலாம். அரசர்கள், செல்வர்கள் பற்றியும் தன்னிலை இரங்கலாகவும் புலவர்கள் சிலர் சற்று வித்தியாசமான செய்யுள்கள் சில பாடியுள்ளனர். ஆனால் அந்தப் பாடல்கள் சமுதாயம்பற்றிய பார்வை விரிவுடைய பாடல்கள் என கொள்ளத் தகுந்தன அல்ல. பாரதிதோன்றி தமிழ் இலக்கியத்தின் போக்கில் பெரிய மாற்றத்தை உருவாக்கிய பின்னரும் தமிழ் இலக்கியச் சொல் நெறியில் உடனடியாகப் பாரிய மாற்றம் எதுவும் நிகழ்ந்து விடவில்லை.

பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் மிகச்சிலரே பாரதிகாட்டிய நெறியை பின்பற்றினர். ஏழை எளிய மக்களை தமிழ் இலக்கியத்தின் நாயகர்களாக சிருஷ்டித்ததுடன் சமூகமாற்றத்துக்குரிய புரட்சிகரமான மார்க்கத்தினை எடுத்துச் சொல்லித் தட்டிக் கொடுத்தர்கள் என்பதை பின்வரும் பாடல்கள் மூலம் இனங்காணலாம்.

"ஆடுகின்றாய் உலகப்பா யோசித் துப்பார்!

ஆர்ப்பாட்டக்காரர் இதை ஒப்பாரா அப்பா!

தேட்ப்பா ஒருவழியை என்று சொன்னேன்

செகத்தப்பன் யோசித்துச் சித்தம் சோர்ந்தான்

ஓடப்பராயிருக்கும்! ஏழையப்பர் உதையபராகிவிட்டால்ஒருநொடிக்குள்

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பாநீ"

ஆனால் பாரதி 1921 இல் மறைந்த பின்னர் சுமார் 40 ஆண்டுகால இடைவெளிவரை இலக்கியத்தில் அவரது சமூகநோக்கு பெருமளவு உறங்கு நிலையிலேயே இருந்து வந்திருக்கிறது. அது முழுமூச்சுடன் வெளிப் படத்தவறிவிட்டது. 60களில தோன்றிய அரசியல், சமூக எழுச்சி இலக்கியங்களில் மாற்றத்தைத் தோற்றுவித்தன. பாரதி உருவாக்கிய பெருமாற்றம் பெருவீச்சுடன் அக்காலம்முதல் வெளிப்படத் தொடங்கியது. அரச சமூக ஆதிக்கம் உள்ளசமுதாயம் எந்தமக்களின் இருப்பினை மூடி மறைத்ததோ அந்த மக்கள் சமூகத்தில் தோன்றியவர்கள் தங்கள் பிரச்சினைகளை, தமது கைகளில் எடுத்துக் கொண்டு தாமே இலக்கியங்களாகப்படைத்து தமது சமுக இருப்பு நிலையை வெளிக்கொண்டு வந்தனர். இதனைப் பின்வரும் கூற்றின் முலம் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

இலக்கியம் எழுத்துப்பற்றி ஒரு முக்கியமான சமூகவியலுண்மையைத் தெரிவிக்கின்றது. அதாவது ஒரு சமூகம் தன்னைத்தானே விடய நோக்காகப் பார்க்கத் தொடங்கும் பொழுதுதான் அதற்கான மனநிலையையும் நோக்கையும் அது பெறும்.

**தெணியான்**

அப்பொழுதுதான் அந்தச் சமூகம் பற்றிய உண்மையான, விமர்சன பூர்வமான எழுத்துக்கள் மேற்கிளம்பும். இதனால்தான் தமிழில் இன்னும் தமிழ்மக்களிடையே நிலவும் சமூகஅமைப்பு, சாதிய அமைப்பு, குறிப்பாக சாதிய வரண்முறை பற்றிய ஆய்வுகள் வரத்தொடங்கவில்லை எனலாம்.

(தொடரும்)

# நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் விளக்கம் அளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்

## சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

நிபுணர்குழு அறிக்கையின் மூலம் இலங்கையர்களுக்கு தண்டனை வழங்கப்பட முடியாது என சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்குழு அறிக்கை ஒரு தலைபட்சமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறொனினும் நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் விளக்கமளிப்பதற்கு இலங்கை நீதிமன்றத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடனோ அல்லது பாதுகாப்புப் படையினருடனோ பேச்சுவார்த்தை நடத்தாது பான் கீ மூனின் நிபுணர்குழு அறிக்கை தயாரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதன்மூலம் இலங்கைப் படையினருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர சந்தர்ப்பம் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்க்குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை எனவும் நியாயமான முறையில் போர் நடைபெற்றதாகவும் தெரிவிப்பது மிகவும் சுலபமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஜப்பானின் இரண்டு யுத்தக்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன

ஜப்பானின் இரண்டு யுத்தக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தினை வந்தடைந்துள்ளன.

கிரிசம் மற்றும் உதாசி என்ற இரண்டு கப்பல்களே கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளன.

இரண்டு நாடுகளினதும் இராணுவங்களுக்கு இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இந்த இரண்டு யுத்தக் கப்பல்களும் நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்ததாக கூறப்படுகின்றது.

இந்த இரண்டு கப்பல்களும் 151 மீற்றர் நீளமுடையவை என தெரிவிக்கப்படுகின்றது.

சோமாலியா மற்றும் ஈடன் வளைகுடாவை அண்மித்த பகுதிகளில் பயணிக்கும் கடற்கொள்ளையர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இந்த இரண்டு கப்பல்களும் ஈடுபடுத்தப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# இலங்கையில் இடம்பெற்றது மனிதாபிமான மீட்பு பணியே

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போர் நடைபெறவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சி அறிவித்துள்ளது. நாட்டில் போர் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் உண்மையில் அரசாங்கப் படையினர் மனிதாபிமான மீட்புப் பணிகளில் ஈடுபட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான மோதல்களின் போது எதிரிகளுக்கும் அரசாங்கம் உணவு, பானங்களை வழங்கியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிபுணர் குழு உண்மைத் தகவல்களின் அடிப்படையில் அறிக்கையை தயாரிக்கத் தவறியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஊடகங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக நிபுணர் குழு போர்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தலைப்பட்சமாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# புலிகளுக்கு எரிபொருள் விநியோகித்த குற்றச்சாட்டில் டிப்போ முகாமையாளர் கைது


(கொழும்பு)

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எரிபொருள் விநியோகித்த குற்றச்சாட்டில் மன்னார் பஸ் டிப்போ முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்பே மேற்படி பஸ் டிப்போ முகாமையாளர் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யுத்த காலத்தில் மன்னார் பஸ் டிப்போவுக்கு விநியோகிக்கப்பட்ட எரிபொருளை அவர் இரகசியமான முறையில்விடுதலைப்புலிகள்அமைப்பிற்கு வழங்கி வந்தமைக்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரகசியப் பொலிஸாரால் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட அவர் நீதிமன்ற அனுமதியுடன் விசேட புலன் விசாரணைகளுக்கென கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் மோட்டார் வாகன காப்புறுதிகளுக்கு குறைந்த கட்டணத்தில் அதிநவீன தொழில்நுட்ப கையடக்க காப்புறுதி அட்டைமுறை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் உதவிப் பொதுமுகாமையாளர் பராக்கிரம அம்பான்பொல வாடிக்கையாளர் ஒருவருக்கு காப்புறுதி அட்டையினை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனை படத்தில் காணலாம்.

# 2011.04 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1500 - போர்த்துக்கீசரான பேதுரோ கப்ரால் என்பவர் பிரேஸில் நாட்டை கண்டுபிடித்தார்.

★ 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் பெஞ்சமின் கிரியெர்சன் தலைமையில் நடு மிசிசிப்பியைத் தாக்கினர்.

★ 1889 - நடுப்பகலில் பல்லாயிரக்கணக்கானோர் காணிகளைக் கைப்பற்றுவதற்காக ஓடினார்கள். சில மணி நேரங்களில் ஐக்கிய அமெரிக்காவில் ஒக்ல ஹோமா நகரம் மற்றும் கத்ரி (Guthrie) ஆகியவற்றில் 10,000 பேர் அங்கிருந்து வெற்றுக் காணிகளைக் கைப்பற்றிக் குடியேறினர்.

★ 1898 - அமெரிக்க கடற்படையினர் கியூபாவின் துறைமுகங்களை முற்றுகையிட்டு ஸ்பானிய சரக்குக் கப்பல் ஒன்றைக் கைப்பற்றினர்.

★ 1912 - ரஷ்யாவின் பொதுவுடைமைக் கட்சியின் பத்திரிகை ப்ராவ்டா சென் பீட்டர்ஸ் பேர்க் இலிருந்து வெளிவர ஆரம்பித்தது.

★ 1915 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் ஈப்ர (Ypres) ஜேர்மனி முதன் முதலாக குளோரின் வாயுவை வேதியியல் ஆயுதமாகப் பாவித்தது.

★ 1944 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் நியூ கினியின் ஒல்லாந்தியா என்ற இடத்தில் தரையிறங்கினர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: குரோவேசியாவில் ஜசெனோவாச் வதை முகாம் கைதிகள் சிறையுடைப்பில் ஈடுபட்ட போது 520 கைதிகள் கொல்லப்பட்டனர். 80 பேர் தப்பியோடினர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் பெர்லினில் எபெர்ஸ்வால்ட் நகரை இலகுவாகக் கைப்பற்றியதைக் கேள்வியுற்ற ஹிட்லர் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார்.

★ 1970 - முதலாவது பூமி நாள் கொண்டாடப்பட்டது.

★ 1983 - ஹிட்லரின் நாட்குறிப்புகள் கிழக்கு ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டதாக டேர் ஸ்டேர்ன் என்ற ஜேர்மனிய இதழ் அறிவித்தது.

★ 1992 - மெக்சிக்கோவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 206 பேர் கொல்லப்பட்டு 500 பேர் வரையில் படுகாயமுற்றனர்.

★ 1997 - அல்ஜீரியாவில் கெமிஸ்ரி என்ற இடத்தில் 93 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1997 - பெருவின் தலைநகர் லீமாவில் ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் 126 நாட்களாகப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த 71 பேர் அரசுப் படைகளின் தாக்குதலின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

★ 2004 - வட கொரியாவில் இரண்டு தொடரூந்துகள் மோதியதில் 150 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006 - நேபாளத்தில் மன்னருக்கெதிராக கலகத்தில் ஈடுபட்ட மக்களாட்சிக்கு ஆதரவானோர் மீது பொலிஸார் சுட்டதில் 243 பேர் காயமுற்றனர்.

★ 2006 - இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஆய்வு மையத்தில் பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1724 - இம்மானுவேல் கண்ட், ஜெர்மனியைச் சேர்ந்த தத்துவவியலாளர் (இ. 1804)

★ 1870 - விளாடிமிர் லெனின், ரஷ்யப் புரட்சியாளர் லெனினிசம் என்ற கோட்பாட்டின் நிறுவுநர். (இ.1924)

★ 1876 - ரொபேர்ட் பாரானி, நேபால் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1936)

★ 1909 - ரீட்டா லெவி- மொண்டால்சினி, நோபல் பரிசு பெற்ற இத்தாலியர்

★ 1919 - டொனால்ட் கிராம், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.2001)

★ 1940 - க.சட்டநாதன், ஈழத்தின் குறிப்பிடத்தக்க சிறுகதையாளர்

### இறப்பு

★ 1994 - ரிச்சார்ட் நிக்சன், ஐக்கிய அமெரிக்காவின் 37 ஆவது ஜனாதிபதி (பி. 1913)

# லிபியாவுக்கு இராணுவ நிபுணர்களை அனுப்பி வைக்க பிரிட்டன் தீர்மானம்

## கடாபி எதிர்ப்பு

(டிரிபோலி)

லிபியாவுக்கு இராணுவ நிபுணர்களை அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ள பிரிட்டனுக்கு, லிபியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அதேநேரம் போரை தற்காலிகமாக நிறுத்தி விட்டு, ஐ.நா. மேற்பார்வையில் இன்னும் ஆறு மாதத்தில் தேர்தல் நடத்தவும், கடாபியின் எதிர்காலம் குறித்தும் விவாதிக்கவும் தயார் என்று லிபிய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

லிபியாவில் தொடர்ந்து நடந்து வரும் போரில், எதிர்த் தரப்பால் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற முடியவில்லை. கடாபி படைகள் வான்வழித்தாக்குதல் மூலம் எதிர்த்தரப்பினரை பின்வாங்கச் செய்கின்றன. பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹாக் கடந்த 19ஆம் திகதி அளித்த பேட்டியில்,

லிபிய எதிர்த் தரப்புக்கு அவர்களின் இராணுவப் பலத்தை அதிகரிப்பது, தொடர்பு மற்றும் போக்குவரத்து, மனிதாபிமான உதவிகளுக்கான நடவடிக்கைகள் ஆகியவை குறித்து ஆலோசனை வழங்க 10 பிரிட்டன் இராணுவ நிபுணர்கள் லிபியாவுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரிவித்திருந்தார். பிரான்ஸும் பிரிட்டன் குழுவோடு தனது நாட்டு நிபுணர்கள் 10 பேரை அனுப்பி வைப்பதாகத் தெரிவித்திருந்தது. அமைச்சர் ஹாக்கின் முடிபுக்கு அவரது கன்சர்வேடிவ் கட்சிக்குள்ளேயே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை ஐ.நா தீர்மானத்தை மீறியதாகும் என்று கருதும் பிரிட்டன் எம்.பிக்கள் உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டி இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இது குறித்து லிபிய வெளியுறவு அமைச்சர் அப்துல் அடி அல் அபைடி அளித்த பேட்டியில் கூறியதாவது, இராணுவ நிபுணர்களை அனுப்பி எதிர்த் தரப்பைப் பலப்படுத்தும் முயற்சியில் பிரிட்டன் இறங்கியுள்ளது கண்டிக்கத்தக்கது. இதனால், லிபியாவில் அமைதி ஏற்படுவதற்குப் பதிலாக, நீண்ட கால பிரச்சினைதான் ஏற்படும்.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு பேச்சு நடந்தால் தான் எதிர்த்தரப்பு கோரும் ஜனநாயகம், சுதந்திரம், அரசியல் சீர்திருத்தம், தேர்தல் ஆகியவை நடக்கும். போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, ஆறு மாத காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட்ட வாய்ப்பிருக்கிறது.

மேலும், அதன்பின் கடாபி இதே பொறுப்பில் நீடிக்க வேண்டுமா? ஓய்வு பெறவேண்டுமா? என்பது உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் விவாதிக்க வேண்டும் என அவர் கூறினார். அல் லிபியா தொலைக் காட்சிக்கு பேட்டியளித்த கடாபி மகன் சயிப் அல் இஸ்லாம் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

ஒவ்வொரு நாளும் நிலவரம் நமக்கு சாதகமாகத் தான் மாறி வருகிறது என்று கூறினார். எனினும் மிஸ்ரட்டா நகரில் ஐ.நா மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து மனிதாபிமான முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பதாக லிபிய அரசு அறிவித்துள்ளது. இதற்கிடையில், டிரிபோலி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் உள்ள தொலைத் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு கட்டமைப்புகள் மீது நேட்டோ விமானப் படைகள் குண்டு வீசித் தாக்கின. (ஸ்ரீ-2)

## மாணவனின் துப்பாக்கி வெடித்ததில் மூவர் காயம்

அமெரிக்காவில் உள்ள ஹிஸ்டன் நகரில் ரோஸ் தொடக்கக்கல்வி என்ற பாடசாலை உள்ளது. இங்கு படித்து வந்த மாணவன் ஒருவன் வீட்டில் இருந்த துப்பாக்கியை பாடசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளான்.

துப்பாக்கியைத் தனது காற்சட்டைப் பொக்கற்றுக்குள் வைத்திருந்தான். மதியம் அனைத்து மாணவர்களுடன் சேர்ந்து சாப்பிடச் சென்றான். அவன்கீழே உட்கார்ந்தபோது பொக்கற்றுக்குள் இருந்த துப்பாக்கி தவறி கீழே விழுந்தது.

அப்போது தானாகத்துப்பாக்கி விசையில் அழுத்தம் ஏற்பட்டு வெடித்தது. துப்பாக்கியில் இருந்த குண்டுகள் வெளியேறின. அது மாணவர்கள் மீது பாய்ந்தது. அதில் 3 மாணவர்கள் காயம் அடைந்தனர்.

வீட்டில் இருக்கும் துப்பாக்கிகளை மாணவர்கள் விளையாட்டாக பாடசாலைக்கு எடுத்து வருவது அமெரிக்காவில் அடிக்கடி இடம் பெறுகிறது. அவர்கள் சக மாணவர்க ளுடன் சண்டை போட்டு சுட்டுக்கொல்லும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. (ஸ்ரீ-2)

## சிரிய எதிர்க்கட்சித் தலைவர் கைது

சிரியாவில் கடந்த 63 ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த அவசர நிலைச்சட்டத்தை நீக்க வகைசெய்யும் மசோதாவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கிடையில் சிரிய எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் அல்ஜசீரா தொலைக் காட்சிக்குப் பேட்டியளித்த உடனே கைது செய்யப்பட்டார். சிரியாவில் ஜனாதிபதி அசாத் உடனடியாக பதவிவிலகக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திவருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளில் 63ஆண்டுகளாக அமுலில் இருந்து வரும் அவசரநிலைச் சட்டம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதும் ஒன்று. கடந்த 19ஆம் திகதி கூடிய சிரிய அமைச்சரவை அச்சட்டத்தை இரத்துச் செய்ய வழிவகுக்கும் மசோதாவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இம்மசோதா சட்டமாவதற்கு பாராளுமன்ற ஒப்புதல் தேவை. எதிர்வரும் மே 2ஆம் திகதி அன்றுதான் பாராளுமன்றம் கூடும். அதேநேரம் இச்சட்டத்திற்கு மாற்றாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் மற்றொரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இது பழைய சட்டத்திற்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல என்ற கருத்து மக்களிடையே நிலவுகிறது. எனினும் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் தொடர இச்சட்டம் வழிவகுக்கிறது.

அதேநேரம் அவசரநிலைச் சட்ட இரத்து மட்டுமே மக்களை அமைதிப்படுத்தி விடாது. கடந்த பல நாட்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விடுவிக்கப்படவேண்டும்.பல அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 19ஆம்திகதி அலெப்போ நகரில் அல் ஜசீரா தொலைக் காட்சிக்குப் பேட்டியளித்த எதிர்க்கட்சித் தலைவர் மஹ்மூத் இஸ்லா அப்பேட்டி முடிந்தவுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். நேற்று முன்தினம் அலெப்போ பல்கலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், பொலிஸாரால் தடியடிப் பிரயோகம் மூலம் கலைக்கப்பட்டனர். எனினும் மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். (ஸ்ரீ-2)



ஏமனில் ஜனாதிபதி சலே பதவி விலகியே தீரவேண்டும் என்பதில், மக்கள் தீவிரமாக உள்ளனர். நேற்று முன்தினம் தலைநகர் சனாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒரு சிறுவனும் ஒரு முதியவரும் தங்கள் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்திய காட்சியைப் படத்தில் காணலாம்.

## சீனாவில் எயிட்ஸ் நோய்க்கு 68 ஆயிரம் பேர் உயிரிழப்பு

சீனாவில் எயிட்ஸ் நோயால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தற்போதைய நிலவரப்படி, இதுவரை அந்நாட்டில் எயிட்ஸ் நோயால் 68 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். சீனாவில் எய்ட்ஸ் நோயால் மொத்தம் 7 இலட்சத்து 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் அந்நோயின் இறுதிக் கட்டத்தில் இருப்பவர்கள். சீன கம்யூனிஸ்ட் அரசு, அந்நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு கண்காணிப்புகள் இருந்த போதிலும், எய்ட்ஸால் பாதிக்கப்பட்டோர் என்பது தெரிந்தால் சமூகப் புறக்கணிப்புக்கு ஆளாகி விடுவோமோ என்ற பயத்தால் பலர் தங்கள் உடல்நிலையை பற்றித் தெளிவாக வெளியில் சொல்வதில்லை.

மேலும் கடந்தாண்டு, எச்.ஐ.வி.யால் புதிதாகப் பாதிக்கப்பட்ட 44 ஆயிரம் பேரில், 13 சதவீதம் பேர் ஆண் ஓரினச் சேர்க்கையா ளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வளவுக்கும் ஓரினச் சேர்க்கைக்கு சீனாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டில் மட்டும் 7 ஆயிரத்து 700 பேர் எய்ட்ஸுக்குப் பலியாகியுள்ளனர். கடந்தாண்டோடு இதுவரை சீனாவில் மொத்தம் 68ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். (ஸ்ரீ-2)




## மக்களை சுட்டுக்கொல்லும்படி முபாரக் உத்தரவிட்டார்

### உண்மையைக் கண்டறியும் குழு அதிர்ச்சித் தகவல்

எகிப்தில் ஜனவரி மாதம் நடந்த மக்கள் புரட்சியின்போது அவர்களைச் சுட்டுக்கொல்லும்படி முன்னாள் எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் தான் உத்தரவிட்டார் என்று உண்மையைக் கண்டறியும் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எகிப்தில் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி முதல் 18 நாட்கள் முன்னாள் ஜனாதிபதி முபாரக்கிற்கு எதிராக மக்கள் புரட்சி இடம் பெற்றது. அப்புரட்சியை அடக்க துப்பாக்கிச் சூடு தனது ஆதரவாளர்கள் மூலம் தாக்குதல் எனப்பல்வேறு வழிகளைக் கையாண்டும் இறுதியில் பதவியை விட்டுவிலக வேண்டியவரானார் முபாரக்.

இந்தப் புரட்சியில் 846 பேர் பலியாயினர். அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள இராணுவ அரசு கடந்த ஜனவரி 25 புரட்சிக்காலத்தில் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய உண்மையைக் கண்டறிய நீதிபதிகள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

இக்குழு 17ஆயிரத்து 58 அதிகாரிகள் மற்றும் சாட்சிகள் 800 வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றின் மூலம் மக்கள் மீதான தாக்குதல் பின்னணியைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டது. நேற்று முன்தினம் அக்குழு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்து வெளியிட்டது. (ஸ்ரீ-2)

## ஜப்பானில் மீன்களிலும் கதிர்வீச்சு பரவியது

ஜப்பானில் ஏற்பட்ட சுனாமித் தாக்குதலில் புகுசிமாவில் உள்ள அணு உலை பாதிக்கப்பட்டது. இந்த அணு உலையில் இருந்து கதிர்வீச்சு பரவியதால் அப்பகுதியிலிருந்த மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். அணுக்கதிர்வீச்சுக் கடலிலும் பரவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இப்போது கதிர்வீச்சுக் கடல் மீன்களிடமும் பரவியிருப்பதால் இந்த மீன்களைச் சாப்பிட்டால் மனிதனுக்கும் கதிர்வீச்சு பாயும் அபாயம் உள்ளது. இதனால் புகுசிமா கடற்பகுதியில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கடலில் வாழும் மீன்கள் ஒரே யிடத்தில் இருப்பது இல்லை. ஒவ்வொரு பருவநிலைக்கும் தகுந்த மாதிரி மீன்கள் மற்ற பகுதிகளுக்கும் செல்லும். புகுசிமா கடற்பகுதிகளில் வசிக்கும் மீன்கள் மற்ற பகுதிகளுக்கு வரும் போது பிடிக்கப்பட்டால் அதனாலும் கதிர்வீச்சு அபாயம் ஏற்படும். எனவே கடலணவு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# தமிழக சட்டமன்ற தேர்தல் முடிவுகள் வெளியாவதில் தாமதம்

(சென்னை)

தமிழக சட்ட சபைக்கு கடந்த 13 ஆம் திகதி நடந்த தேர்தலில் 78 சதவீத வாக்குகள் பதிவானது.வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தமிழ் நாடு முழுவதும் 234 தொகுதிகளில் பதிவான வாக்குகள் 91 மையங்களில் வைத்து எண்ணப்படுகிறது.

வாக்கு எண்ணிக்கைக்கு இன்னும் 22 நாட்கள் உள்ளதால் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.ஒவ்வொரு தொகுதி வாக்குகளும் ஒரு தேர்தல் பார்வையாளர் முன்னிலையில்தான் எண்ணப்படும்.இதற்காக 234 பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வாக்கு எண்ணிக்கையை நெறிப்படுத்துவார்கள்.

வாக்கு எண்ணிக்கையில் இந்தத் தடவை புதிய முறை கடைபிடிக்கப்படவுள்ளது.கடந்த தேர்தல்களில் வாக்கு எண்ணிக்கை ஒவ்வொரு சுற்றாக முடிய முடிய அதன் விபரம் வெளியிடப்பட்டு விடும்.இதனால் உடனடியாக முன்னணி நிலவரம் தெரிந்து விடும்.

ஆனால், இந்தத் தடவை ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை முடிந்ததும் தேர்தல் பார்வையாளரிடம் தெரிவிக்கப்படும்.அவர் ஒப்புதல் கொடுத்தபின்னர் வாக்குவிபரத்தை வெளியிட முடியும். ஒவ்வொரு தொகுதி வாக்குகளும் தலா 14 மேசை மீது வைத்து எண்ணப்படும்.

ஒவ்வொரு பகுதி மின்னணு இயந்திரங்களை 14 மேசைகளிலும் வைத்து எண்ணுவார்கள். 14 மேசை வாக்குக்களும் எண்ணி முடிந்த பின்பே அந்தச் சுற்று வாக்கு விபரத்தை பார்வையாளர் வெளியிடுவார்.இந்தப் புதிய நடைமுறையால் வாக்கு முன்னணி விபரம் வெளியாவதில் சற்று தாமதம் ஏற்படலாம்.

தேர்தல் பார்வையாளர் ஒப்புதல் வழங்காமல் அடுத்த சுற்று வாக்குகளை எண்ண முடியாது என்பதால் மதியத்துக்கு பின்னரே தெளிவான நிலை தெரியவரும் என்று கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கை அரசைக் கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்



## வைகோ அறிவிப்பு

(சென்னை)

இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்த வலியுறுத்தி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் எதிர்வரும் 25 ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெ றுமென ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் ஐ.நா. மூவர் குழு அறிக்கையின் மூலம் தெரி யவந்துள்ளது. இலங்கை அரசின் போர்க் குற்றங்களை விசாரிக்க வலியுறுத்தி ஐ.நா. வில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தையும் இந்தியா தோற்கடித்தது.

ஆனால், இலங்கையில் அமைதியை நிலை நாட்டியதாக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா வெற்றிபெறச் செய்தது.

கூண்டில் நிறுத்தி தண்டிக்கப்பட வேண் டிய போர்க் குற்றவாளிகளை திரும்பத் திரு ம்ப இந்தியாவுக்கு அழைத்துக் கொண்டாடுகி றது. இது தொடர்ந்தால் இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கு இந்தியாவும் பங்காளி என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடும்.

இலங்கை அரசின் போர் குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்த வலியுறுத்தியும் ஈழத்தமிழர்களுக் கான ஆதரவை உலகத்துக்குக் காட்டவும் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று வைகோ தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# துணை இராணுவ பாதுகாப்புடன் வாக்குகள் எண்ணப்படவேண்டும்



## ஜெயலலிதா வலியுறுத்தல்

(சென்னை)

தமிழகத்தில் துணை இராணுவப் பாதுகாப்புடன் வாக்கு எண்ணப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு அ.தி. மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி பிரவீன் குமாருக்கு அனுப்பிய கடிதத்தில் அடுத்த மாதம் 13 ஆம் திகதி வாக்கு எண்ணும் பணி சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய தமிழ் நாட்டில் அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வாக்கு எண்ணிக்கை தொடங்குவதில் இருந்து தேர்தல் அதிகாரிகள் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் வரை சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்படுவதை உறுதி செய்வதற்கு தமிழ் நாட்டின் அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் துணை இராணுவப் படையினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

உரிய அடையாள அட்டை இல்லாமல் வாக்கு எண்ணும் மையங்களில் நுழைபவர்களை தடுப்பதற்கும் துணை இராணுவப் படைகளை ஈடுபடுத்தலாம். தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பார்வையாளர் முன்னிலையில் வாக்கு எண்ணும் பணியை தொடங்க வேண்டும். வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டு தேர்தல் அதிகாரியால் தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் வரை அந்தத் தேர்தல் பார்வையாளர் அங்கு இருக்க வேண்டும்.

முறைகேடுகள் நடைபெறுவதை தடுப்பதற்கு ஒவ்வொரு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் சீல் அகற்றப்பட்டு வாக்குகள் எண்ணி முடிக்கப்படும் வரை ஒட்டு மொத்த வாக்கு எண்ணும் பணியும் வீடியோ பதிவு செய்யப்பட வேண்டும். அனைத்து வேட்பாளர்கள் முன்னிலையிலும் ஒவ்வொரு சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவும் அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட வேண்டும்.

வாக்கு எண்ணும் பணியில் ஒளிவு மறைவற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவும் அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்ட பின்னரே அடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கை தொடங்க வேண்டும். இந்த அம்சங்களை தேர்தல் ஆணையம் அவசர அடிப்படையில் பரிசீலித்து இது தொடர்பாக உரிய உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

## சத்யசாயிபாபாவுக்கு தொடர்ந்தும் சிகிச்சை; அமெ.விலிருந்து மருத்துவ நிபுணர்கள் வருகை

(புட்டபர்த்தி)

புட்டபர்த்தி ஸ்ரீசத்ய சாய்பாபா சுவாசக் கோளாறு காரணமாக கடந்த மாதம் 28 ஆம் திகதி புட்டபர்த்தியில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு செயற்கைச் சுவாசம் கொடுக்கப்பட்டு வருகிறது.

25 ஆவது நாளாக நேற்று அவருக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்தனர். சாய்பாபாவுக்கு சுவாசக்கோளாறுடன் இரத்த அழுத்தம், சிறுநீரக செயற்பாட்டுக் கோளாறுகளும் உள்ளன. இதனால் அவரது ஏனைய உடல் உறுப்புகளின் செயற்பாடுகளிலும் பிரச்சினை ஏற்பட்டது.

இதையடுத்து சாய்பாபாவின் உடல்நிலை கவலைக்கிடமானது. அவரை 24 மணி நேரமும் வைத்தியர் குழு கண்காணித்து வருகிறது. கடந்த வாரம் சாய்பாபா உடல் நிலையில் லேசான முன்னேற்றம் ஏற்பட்டது. பின் அவரது உடல் உறுப்புகள் சிகிச்சைக்கு எந்த வித ஒத்துழைப்பும் கொடுக்கவில்லை.

கடந்த 19 ஆம் திகதி சாய்பாபாவின் கல்லீரல் செயல் இழந்து போனது. இதனால் அவருக்கு மஞ்சள் காமாலை தாக்கியுள்ளது. இதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சாய்பாபா ஜீவ சமாதி அடையப் போவதாக ஒரு வதந்தி பரவியது.

இது பக்தர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. புட்டபர்த்தியை நோக்கி பக்தர்கள் படையெடுத்தனர். சாய்பாபா உடல்நிலை குறித்து மாறுபட்ட தகவல்கள், வதந்திகள் பரவியதால் நேற்று முன்தினம் புட்டபர்த்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

புட்டபர்த்தி அருகில் உள்ள தர்மாவரம் ,இந்துப்பூர், அனந்தப்பூர் நகரங்களிலும் பதற்றமான சூழ்நிலை உருவானது. இதையடுத்து இந்த நகரங்களில் கூடுதல் தடுப்புகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் சாய்பாபாவுக்கு மின் பிசியோ தெரபிக் சிகிச்சை அளிக்க அமெரிக்காவில் இருந்து டாக்டர் யோக்யாராமன் தலைமையில் சிறப்பு நிபுணர்கள் நேற்று முன்தினம் புட்டபர்த்தி வந்தனர். அவர்கள் நேற்று சாய்பாபாவுக்கு புதிய சிகிச்சையை ஆரம்பித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சாய்பாபாவின் சிலையிலிருந்து எண்ணெய் வடிந்ததால் பரபரப்பு

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் சத்ய சாய்பாபா, இதயம், நுரையீரல் பாதிப்புக் காரணமாக அங்குள்ள சத்ய சாய் விசேட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரின் உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாகவுள்ளது.

சாய்பாபா விரைவில் குணமாக வேண்டும் என்று நாடு முழுவதும் இருக்கும் பக்தர்கள் பிரார்த்தனை செய்து வருகின்றார்கள்.


இந்நிலையில் புட்டபர்த்தி நகரில் உள்ள ஒருவரது வீட்டில் இருக்கும் சாய்பாபாவின் சிலையில் எண்ணெய் தானாக வடிந்த சம்பவம் பக்தர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

புட்டபர்த்தியில் ரஹீம் என்பவரது வீட்டில் 4 அடி உயர சாய்பாபா மெழுகுசிலை உள்ளது.


அந்தச்சிலையின் கால்களிலிருந்து நேற்று முன்தினம் எண்ணெய் போன்ற திரவம் வடிய ஆரம்பித்தது. உடனே ரஹீமின் மனைவி அக்கம் பக்கம் வசிப்பவர்களிடம் கூறினார். இதனால் வீட்டில் கூட்டம் கூடியது. அவர்கள் பக்திப் பரவசத்தோடு பாபாவை வணங்கினர்.


கடந்த நவம்பர் மாதம் எனது கனவில் சாய்பாபா வந்து அவரது சிலையை வழிபடச் சொன்னார். அதன்படி செய்து வணங்கி வந்தேன். இப்போது இந்த அதிசயம் நடந்துள்ளது. எண்ணெயை முகர்ந்து பார்த்தபோது மிகவும் மணமாக இருந்தது. இது , சாய்பாபா விரைவில் குணமாகி வருவார் என்பதன் அறிகுறியே என்றார் ரஹீம்.

சாய்பாபா சிலையில் இருந்து எண்ணெய் வடியும் அதிசயத்தைக் காண அப்பகுதியில் ஏராளமானோர் திரண்டதால் பொலிஸார் வந்து கூட்டத்தை கட்டுப்படுத்தினர். (ஸ்ரீ)



மூன்று செயற்கை கோள்களுடன் பி.எஸ்.எல்.வி.சி-16 ரொக்கெட் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. வெண்ணிற புகையைக் கக்கிக் கொண்டு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.





இலங்கை யுத்தக்குற்றங்களை மேற்கொண்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் 10 கையெழுத்துக்களைத் திரட்டும் கையெழுத்து வேட்டை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கையெழுத்து வேட்டையின் போது பொதுமக்கள் பலரும் மிகவும் ஆர்வத்துடன் கையெழுத்திடுவதை படங்களில் காணலாம்.

# பூமி தன்னைத்தானே சுற்றும் வேகத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது

கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி ஜப்பானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியை அடுத்து புவி தன்னைத் தானே சுற்றும் வேகத்தில் சிறு மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புவி தட்டுக்களில் ஏற்பட்டுள்ள மாற்றமே இதற்குகாரணமாக அமைந்துள்ளதென புவிச் சரிதவியல் சிரேஷ்ட நிபுணர் கலாநிதி வில்பர்ட் கெஹெல்பன்னல குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி நாளொன்றின் காலத்தில் 1.8மைக்ரோ செக்கன் குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேல் திசையாகவுள்ள பசுபிக் கடற்பரப்பிற்கும் மேல் திசையில் இருந்து கிழக்கேயுள்ள வட அமெ ரிக்க கடற்பரப்பிற்கும் இடையிலான புவித் தட்டுக்களே ஒன்றுக் கொன்று உராய்வதாக கலாநிதி வில்பர்ட் கெஹேல்பன்னல தெரி வித்தார்.

பூமியதிர்ச்சியினால் ஜப்பான் அமைந்துள்ள வட அமெரிக்க புவித் தட்டு கிழக்கு நோக்கி 2.6 மீற்றர்கள் நகர்ந்துள்ளதால் புவியின் மொத்த மேற்பரப்பில் நிலவிய மாற்றம் காரணமாகவே புவி தன்னைத் தானே சுற்றுவதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் புவி தன்னைத் தானே சுற்றும் வேகம் சற்று அதிகரித்துள்ளதுடன் நேரக் கணிப்பில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நீரிழிவு பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் அனுசரனையுடன் நீரிழிவை வெற்றி கொள்வோம் விழிப்புணர்வுக் கழகத்தினரால் மருத்துவ பரிசோதனை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை கிழக்கு நாவலடி உதய நிலா முன்பள்ளி மண்டபத்தில் நடத்தப்படவுள்ளதென விழிப்புணர்வு கழகத் தலைவர் வைத்திய கலாநிதி தம்பிஜயா சர்மிளா தெரிவித்துள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபற்றி பயன் பெறுமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# இவ்வாண்டில் கடனட்டை பாவனை 7.4சதவீதத்தால் வீழ்ச்சி

இலங்கையில் கடனட்டை பாவிப்பவர்களின் எண்ணிக்கை 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010ஆம் ஆண்டு 7.4சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு காலப்பகுதி யில் 8இலட்சத்து 40ஆயிரத்து 409பேர் கடனட்டையை பாவித்துள்ளனர்.கடந்த 2010 ஆண்டு 7இலட்சத்து 78ஆயிரத்து 549ஆக காணப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# இந்திய அனுசரணையுடன் தொழிற்பயிற்சி நிலையம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் தொழில்சார் பயிற்சி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான ,புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று இந்திய உயர்ஸ்தானிகருக்கும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளருக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ள்தாக தெரிவிக்கப்படுகிறது .

இந்திய உயர்ஸ்தானிகரகம் வெளியிட்டு ள்ள அறிக்கைஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஐ.நா.நிபுணர்குழு தனக்குரிய ஆணையை மீறியுள்ளது

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை தொடர்பாக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவானது முறைமையான ஐ.நா.வின் அங்க மொன்றல்ல எனவும் அக்குழு தனக்கு வழங்கப்பட்ட ஆணையை மீறிச் சென்றுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்திற்கு மேலும் சிக்கலாகும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வதை ஐ.நா தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

இந்த அறிக்கையை வெளியி டுவது அடிப்படைத் தவறாகும்.

நாம் ஐ.நா.வுக்கு என்ன கூறுகிறோம் என்றால் எம்மை இணைந்து செயற்பட விடுங்கள் என்பதே. இலங்கை அதன் இருண்ட காலங்களிலிருந்து வெளிவரும் போது அதற்கு ஐ.நா.உதவ வேண்டும் என அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# மரத்தில் தொங்கிய நிலையில் மட்டு.மாணவனின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கதிர்காமத்தில் குளித்துக் கொண்டிருக்கும் போது நீரில் மூழ்கி காணாமல் போன மாணவனின் சடலம் நேற்று வியாழக்கிழமை காலை மரமொன்றில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு நாமகள் மகா வித்தியாலய உயர்தர பாடசாலையிலிருந்து96 மாணவர்களும் அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்களும் நான்கு நாள் கல்வி சுற்றுலாவை மேற்கொண்டு நேற்று முன்தினம் காலை பயணத்தை ஆரம்பித்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் செல்லக் கதிர்காமம் வாவியில் குளித்துக்கொண்டிருந்தபோது 4 மாணவர்கள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டனர். இவர்களில் மூவர் காயப்பட்ட போதிலும் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அதிபர் ரி.கோபாலபிள்ளை தெரிவித்தார்.

நீரினால் அடித்து செல்லப்பட்ட மாணவன் இம்முறை க.பொ.த. உயர்தரபரீட்சைக்கு தோற்றும்சுபாரத்தினம் யுகன் எனவும் அதிபர் தெரிவித்தார்.

இந்த நிலையில் சடலம் மரத்தில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை8மணியளவில் கதிர்காமம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. தற்போது மரணவிசாரணை நடைபெறுவதுடன் விசாரணை முடிபடைந்தவுடன் சடலம் அவரது சொந்த ஊருக்கு எடுத்து வரப்படுமெனவும் மட்டக்களப்பு வவுணதீவு நாமகள் மகா வித்தியாலய அதிபர் ரி.கோபாலபிள்ளை தெரிவித்தார்.

(முந்திய செய்தி 11 ஆம் பக்கத்தில்) (ஸ்ரீ-2)

# யாழ்ப்பாணம் சுற்றுலாத்துறை நூல் ஆங்கில மொழியில் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுற்றுலாப் பயணிகளாக யாழ்ப்பாணம் வருபவர்களுக்கு வழிகாட்டும் நூலாக யாழ்ப்பாணம் சுற்றுலாத்துறை என்ற நூல் மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலின் முதல் பிரதியை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்து அதனை வெளியிட்டு வைத்தார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக இந்த யாழ்ப்பாணம் சுற்றுலாத்துறை என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நூலில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்-கட்டடங்கள்-தொல்பொருள் சின்னங்கள் ஆகியவற்றின் விபரங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆங்கில மொழியில் தொகுக்கப்பட்ட இந்த நூல் 27 பக்கங்களைக் கொண்டுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் சின்னங்களின் அழகிய வர்ணப்படங்களுடன் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.வே.தி.செல்வரத்தினம் (S.L.E.A.S.I)



வடமராட்சி, யாழ்ப்பாணம் கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளராகவும், யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்ற உயர்திரு.வே.தி.செல்வரத்தினம் (S.L.E.A.S.I) அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மருதங்கேணி கோட்ட மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலைச் சமூகங்கள்.

(சி-3043)

நெல் முற்ற முற்ற தலை சாய்க்கிறது. தலை சாய்க்க மறுக்கும் தென்னை அடியோடு சாய்கிறது. *- சி.என். அண்ணாத்துரை*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மீட்கப்பட்ட மிதிவெடிகளில் பாகிஸ்தான் உற்பத்தியே அதிகம்

## மிதிவெடி செயற்பாட்டு அதிகாரிகள் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் மிதிவெடிகள் மீட்கும் பணி 60 வீதம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் மீட்கப்பட்டதில் பெரும்பான்மையானது பாகிஸ்தானிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகவும் வட பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தால் நடத்தப்பட்ட மிதி வெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்விற்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் நடத்தப்பட்ட கண்காட்சியில் பத்திரிகையாளர்களின் கேள்விக்கு விளக்கமளிக்கையிலேயே அவர்களினால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக அவர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

யாழ் குடாநாட்டில் மூன்று வகையான நிலக்கண்ணி வெடிகள் மீட்கப்பட்டுள்ளன. இதில் பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்பட்ட பி-4 என்ற நிலக்கண்ணிவெடியே அதிகமாகக் காணப்படுகிறது.

மிதிவெடிகளை அகற்றும் பணியில் யாழ் குடாநாட்டில் மூன்று நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஹலோ ரஸ், யு.என்.டி.பி, இராணுவப் பொறியியல் படைப்பிரிவு ஆகியனவே அப்பணியில் ஈடுபடுகின்றன.

உயர்பாதுகாப்பு வலயமாகவிருந்த பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். இன்னும் பல பகுதிகளில் மிதிவெடி அபாயம் காரணமாக மீள் குடியேற்றம் தாமதமடைந்து வருகின்றது.

காலநிலை மாற்றம், தரைத்தோற்ற அமைப்பு போன்ற பல காரணங்களாலேயே இவை தடைப்பட்டு வருகின்றது.

இவை தவிர நவீன கருவிகள், ஆளணி என்பன குறைவாகவே காணப்படுகிறது. இதனால் மீட்புப்பணிகளில் தாமதம் ஏற்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-6)

# திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு ஒரு பகிரங்க மடல்!

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு யாழ் மாவட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

தங்கள் கணவர் காலஞ் சென்ற தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது தமிழ் மக்களின் உரிமைசார் விடயத்தில் பாராளுமன்றத்தில் துணிந்து குரல் கொடுத்தவர்.

பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையின் தொகுப்பை அவரின் நினைவாக வெளியிட்டு வைத்த தங்களுக்கு இதை நான் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள் என்ற எல்லைகளை மீறி தமிழினத்தின் பிரச்சினைகளைத் துணிந்து கூறிய பெருமை மகேஸ்வரனுக்கு உண்டு.

தான் இப்படி உரையாற்றினால் அது தனது பதவிக்கு கூடாது என்ற நிலைமையும், மகேஸ்வரனுக்கு ஆசனம் கொடுத்ததால் ஐக்கிய தேசியக்கட்சி சிங்கள மக்களுக்கு பாதகம் செய்து விட்டதென்ற நிலைப்பாடும் உருவாகிய சந்தர்ப்பங்கள் ஏராளம்.

அத்தகைய சந்தர்ப்பங்களை உணர்ந்திருந்தும் அமரர் மகேஸ்வரன் அஞ்சவில்லை. கூறவேண்டியதை கூறவேண்டும் என்பதில் அவர் சற்றும் பின்னிற்கவில்லை.

இந்நிலையில் அவர் மரணமடைந்த பின்னர், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தாங்கள் பெற்றுக் கொண்டீர்கள்.

இந்நிலையில் தமிழர் தொடர்பில் உங்களுக்கான கடமைப் பொறுப்புகள் ஏராளம் உண்டு.

அந்தவகையில், ஐ.நா. நிபுணர் குழு விடுத்த அறிக்கைக்கு தாங்கள் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த அறிக்கை தமிழ் மக்களை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்த நாட்டில் தமிழர் தொடர்பில் எந்த அநீதி நடந்தாலும் அதனை அங்கீகரித்தாக வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக உள்ளது.

தாங்கள் தேர்தலில் போட்டியிட்ட போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறிய உறுதிமொழிகள், ஆற்றிய உரைகள், செய்த பிரசாரங்கள் அத்தனையையும் தவிடுபொடியாக்குவதாக ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டனம் உள்ளதெனலாம்.

இங்குதான் உங்களின் கருத்தை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

உண்மையில் மகேஸ்வரன் இன்றிருந்தால், ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கைக்காக அவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கண்டித்திருப்பார். தானும் பதிலறிக்கை விடுத்திருப்பார் என்பது சர்வ நிச்சயம்.

இப்போது யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வாக்குகளால் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

கண்டிப்பீர்களா? அல்லது கவலை தெரிவிப்பீர்களா? அல்லது எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பண்பாட்டு மரபில் – சரியான சந்தர்ப்பங்களில் – மௌனம் காத்து தப்பித்துக் கொள்வீர்களா?

இதை அறிவதற்காகவே இப் பகிரங்க மடலை எழுதுகிறோம். பதிலளிப்பது உங்கள் கடமை.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## (புனித வெள்ளி)

### ஒவ்வொரு நாளும் ஒருவருக்கொருவர் சமாதானத்தை அறிவித்துக்கொள்வோம்(யோ 18:1–19:42)

நற்கருணையின் வாழ்க்கை வடிவத்திற்கு,பெரிய வியாழன் பாதம் கழுவும் பணிமூலம் ஆரம்ப உரை எழுதிய இயேசு,பெரிய வெள்ளியில் விரிவுரை எழுதுகின்றார்.கெதரோன் நீரோடையில் தொடங்கி கொல்கொத்தா கல்லறையில் அடக்கும் வரையிலும் ஒவ்வொரு இடத்திலும் இவ்விரிவுரை இரத்தத்தால் வரையப்பட்டுள்ளது. நள்ளிரவில் தொடங்கி,வாத விவாதமின்றி விடியலுக்குள் புதிய பாஸ்கா பலியை பலியாக்கிவிட்டனர்.''இறைவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லையே ''(யோ18:38) ''அவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை'' (யோ 19:4)''இறைவனிடம் குற்றம் இருப்பதாக எனக்கு தெரியவில்லை ''(யோ 19:6)''நீங்களே இவனைக் கொண்டு போய் சிலுவையில் அறையுங்கள்'' பிலாத்துவின் சாட்சியம் இது. ஆனாலும், கைவசம் உள்ள கைவந்த கொடும் செயல் அனைத்தையும் கையாண்டனர். வன்சொல், வசை மொழி ,கேலி கிண்டல் அடித்தல், இடித்தல்,முள்முடி, சாட்டை அடி, கிழிந்து தொங்கும் சதைகள்,இரத்தம் வடியும் உடல்,கண்ணீர் சிந்தும் கண்கள், ஏங்கும் இதயம், சிலுவை சுமக்கும் தோள்கள்,சிலுவை மரணம் இவை அனைத்தும் நற்கருணையின் வாழ்க்கை வடிவத்திற்கான பல்வேறு விரிவுரைகள். பெரிய வெள்ளிக்கிழமை முழுவதும் கடும் வேதனை, சோதனை, கொடுமை மத்தியில் நிகழ்ந்துள்ளது. நம் கணிப்பில் இரு நிகழ்வுகள் இரண்டுநாள் நிகழ்சிகள். ஆனால் இரண்டும் ஒன்று. ஒரே பொழுதில் நிகழ்ந்தவை .ஆகவே ஒவ்வொரு திருப்பலியிலும் இவை இரண்டும் இணைந்தே நடைபெறுகின்றன.

அயலானுக்காக வாழ்வதென்பது ஒரு பெரிய வெள்ளி வாழ்க்கை.அநியாயத்தீர்ப்பு-பழிச்சொல்லுக்கு குறைவு இருக்காது. எம் வாழ்வில் கண்ணீர் வடிக்காத நாளும் நேரமும் அருந்தல்.அலட்சியமும் அவமானமும் அடுக்கி வரும்.நீதிமன்றம் பொலிஸ் நிலையம் அலையும் அலைச்சல் அதிகம் இருக்கும்.உடலிலும் உள்ளத்திலும் வேதனை தொடரும். உருட்டல் மிரட்டல்களை சந்திக்க வேண்டியதிருக்கும் மொத்தத்தில் ஒரு பெரிய வெள்ளி, நற்க ருணை வாழ்வு அங்கெல்லாம் நடைபெறுகிறது. இறைவன் மகிமையடைகிறார். பாஸ்கா வாழ்வை வாழ்வோம்.

**ம. பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

# வெள்ளி நற்சிந்தனை

## 16 செவ்வியல் தமிழில் சீர்மியம்

ஒருவரை இன்னொருவர் வாழ்த்துவது ஒரு சுயநலமான செயற்பாடென மணிவாசகர் பாடலொன்றிலே குறிப்பிட்டுள்ளார்.குறிப்பாகத் தேவர்கள் இறைவனை மனதினாலும் மொழியினாலும் சிறப்பாக வாழ்த்துகின்றனர். இடைவிடாது இறைவனை நினைக்கின்றனர். தாம் வாழுகின்ற இன்பமான உலகத்திலே நெடுங்காலம் வாழவேண்டும். அதனால் உயர்வடைந்து தம்மை எல்லோரும் தொழுகின்ற நிலையை அடைய வேண்டும். இதுவே தேவர்களுடைய விருப்பமாகும்.இன்றைய மனிதர்களும் இந்தநிலையிலே தான் செயற்படுகின்றனர்.

எனவே பயன் கருதிய வழிபாடே மேற்கொள்ளப்படுவதாக மணிவாசகர் குறிப்பிடுகின்றார்.வழிபாட்டின் மூலம் இன்பவாழ்வைப் பெறலாம். உயர்வடையலாம்.பிறர் தம்மை வணங்கும் நிலையடையலாம் என்ற உலகியல் பயன்களை பெறும் நோக்கை மணிவாசகர் விரும்பவில்லை. நாயடியேனாகிய நான் எடுத்த பிறவியை அறுக்கும் பயனைப் பெறுவதற்காக உன்னைப் பரவுவனே எனக் கூறுகிறார். துன்பத்தை தருகின்ற பிறவியை வழிபாட்டினால் நீக்கி நித்திய இன்பம் தரும் முத்தியின்பத்தைப் பெறலாம்.

அதிலும் மனிதப் பிறப்பை பாழ்ந்த பிறப்பு என்கிறார். எதுவித பயனையும் தராத பிறப்பு இறைவன் தோற்றத்தைப் பற்றிப் கூறும் போது வண்டுகள் சூழ்ந் து மொய்த்து ஒலிக்கும் கொன்றை மலர் மாலை அவர் கண்களில் தெரிகிறது. அந்த மாலையணிந்த இறைவனைப் பரவுவனே எனக்குறிப்பிட்டுள்ளார், வழிபாட்டு நடைமுறைகள் பல உள. அவற்றில் பரவுதலும் ஒன்றாகும். பரவுதல் என்பது பல்வேறுபட்ட மடைப்பொருட்களை இறைவன் முன்னிலை யில் பரவி வைத்து வழிபடல்.' மடைபோடுதல்' என்னும் நடைமுறை இன்றும் வழக்கிலுள்ளது. முக்கனி வகை, பொங்கல், சிற்றுண்டி என்பவற்றை மடை பரவி வைப்பார். காய்மடை, பூமடை என மடை பரப்பப்படுகிறது. மணிவாசகர் வாழ்வியல் வழிபாட்டு நடைமுறைகளைப் பயின்றிருப்பது நன்மையளிக்கும் என்ற நிலை உருவாக்கத்தையும் பாடல் உணர்த்துகிறது.

பயன் கருதாத வழிபாடு ஒன்றையே செய்வது நல்லது என மணிவாசகர் கூறும் போது உலக இன்பங்களையெல்லாம் துறந்த ஒரு நிலையில் அவர் இருப்பதை நன்குணரமுடிகிறது.உலக இன்பத்தை வேண்டியே பலர் வழிபாடு செய்கிறனர். இறைவன்பற்றியும் அவனது அருள் பற்றியும் மணிவாசகர் நன்கு உணர்ந்து கொண்டமையால் தன்னை 'நாயடியேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.'தொழுதல்' இட்ட வேலைகள் எல்லாவற்றையும் பணிவுடன் செய்யும் தன்மையாகும்.

தேவர்களின் மன நிலையோடும் தன்னுடைய மன நிலையையும் காட்டியுள்ளார். நிலையான இன்பத்தை தேவர்கள் பெற முயற்சி செய்துள்ளனர் எனக்கூறமுடியாது.அவர்கள் தமது உலக வாழ்க்கையையே விரும்புகின்றனர். மணி வாசகர் தமக்கும் தேவர்களுக்குமிடையே வேறு பாட்டினைப் பாடலிலே நன்கு புலப்படுத்தியுள்ளார்.

"வாழ்த்துவதும் வானவர்கள்
தாம் வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து
தம்மையெல்லாந் தொழவேண்டித்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை
நாணடியேன்
பாழ்த்த பிறர் படுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே"

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**






யா/சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் விநாசித்தம்பி சண்முகநாதனிற்கான சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் அதிபர் வ.ஶ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதனையும் விழா நாயகன் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம். *(படங்கள்: விஜயகாந்)*

# யுத்தக்குற்ற அறிக்கைக்கு இலங்கை அரசு அர்த்தமுள்ள வகையில் பதிலளிக்க வேண்டும்

## புதிய ஜனநாயக மாக்கிசலெனிசக் கட்சி தெரிவிப்பு

ஐ.நா.செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு முன்வைத்துள்ள யுத்தக்குற்ற அறிக்கைக்கு இலங்கை அரசு அர்த்தமுள்ள வகையில் பதிலளிக்க வேண்டும். அந்த அறிக்கையை இறைமை மீறல் எனத் தட்டிக்கழிப்பது வேடிக்கையானது என புதிய ஜனநாயக மாக்கிசலெனிசக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அனைத்து மக்களுக்கும் மறுக்கப்படும் ஜனநாயகம், இழைக்கப்படும் மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்களுக்குப் புரியப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் என்பன பற்றி இலங்கை அரசு பதில் கூறும் கடப்பாடுடையதாகும்.

அதனை உரிய வழிகளில் நிறைவேற்ற முற்படாது ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை இலங்கை மீதான இறைமை மீறல் என ஒற்றைப் பரிமாண நிலை நின்று தட்டிக்கழிப்பது வேடிக்கையானதும் ஆபத்தானதுமாகும்.

இலங்கையின் இறைமை என்பது நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் ஆகிய தேசிய இனங்களினதும் ஏனைய சிறுபான்மை சமூகங்களினதும் ஒட்டுமொத்த இறைமையையே குறிப்பதாகும்.

அத்தகைய இறைமை மீது அமெரிக்கா, மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளின் உள்நோக்க பின்புலத்துடன் ஐ.நா. மூலமான தலையீடு இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அதற்கு உள்ள ஒரே வழி ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு முன்வைத்துள்ள விடயங்களுக்கு அரசு அர்த்தமுடைய வகையில் பதில் சொல்லும் கடப்பாட்டை முன்னெடுப்பதேயாகும். அதன்மூலமாகவே அமெரிக்க, மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளின் உள்நோக்க முயற்சிகளைத் தோற்கடிக்க முடியும்.

ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்க சக்திகள் தமிழீழப் பிரிவினைக்கு ஆதரவு போல் நாடகமாடி தமிழ் மக்களின் போராட்டத்தைத் திசை திருப்பி தமது நலனுக்கான அப்போராட்டத்தை நந்திக்கடலில் மூழ்கடிக்க வைத்தன.

இலங்கை பேரினவாத அரசுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணை புரிந்தன. இந்த நடவடிக்கையின் பின்னரும் ராஜபக்ஷ அரசை தம்வசம் முழுமையாக இழுக்க முடியாமையால் புலம்பெயர்ந்த தமிழ் மேட்டுக்குடியினரின் நாடு கடந்த தமிழீழ அரசுக்கு ஆதரவு தெரிவிப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் மேற்கொண்டுள்ளன.

அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் மீது போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ளப் போவதாக அச்சுறுத்தி வருகின்றமை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கும் நோக்கத்திலன்றி ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையிலான அரசை மிரட்டி முழு இலங்கையையும் கபளீகரம் செய்யும் ஏகாதிபத்திய நோக்கத்தையும் கொண்டுள்ளன.

ராஜபக்ஷ அரசு சிங்கள மக்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு வேடத்தைக் கொண்டிருந்தாலும் அது நவகொலனித்துவத்தின் வாடிக்கை அரசாகவே இலங்கையை நிலைநிறுத்தியுள்ளது.

இந்நிலையில் அவரின் நிலப்பிரபுத்துவ நிலைப்பாட்டில் ஒன்றான தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை மறுப்பானது ஏகாதிபத்திய அக்கறைகளுடன் முரண்படுவதனையும் தற்போது காணமுடிகின்றது.

இதில் ராஜபக்ஷவிடம் ஏகாதிபத்திய எதிர்ப்புமில்லை. ஏகாதிபத்தியத்திடம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அக்கறையும் இல்லை.

எனவே, அமெரிக்கா, ஐ.நா. என்பனவற்றின் பசப்பலுக்கும் இலங்கை அரசின் மறுப்புக்கும் அப்பால் போர்க்குற்றம், மனித உரிமை மீறல், ஜனநாயக மறுப்பு ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நீதியான விசாரணைக்கு முன்வர வேண்டும்.

அத்துடன் தேசிய இனங்களுக்கிடையிலான அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் தீர்வுக்கும் முன் முயற்சிகள் செய்ய வேண்டும். அதுவே அமெரிக்க, மேற்குலக அழுத்தங்களையும் தலையீடுகளையும் எதிர்த்து அனைத்து மக்களையும் ஒன்றிணையச் செய்யும் என புதிய ஜனநாயக மாக்கிசலெனிசக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(ஶ்ரீ-2)

# நீண்டகாலமாக அரசாங்கம் இல்லாத நாடாக பெல்ஜியம் கின்னஸ் சாதனை

உலகில் நீண்டகாலமாக அரசாங்கம் ஒன்று இல்லாத நாடு என்ற பெருமை பெல்ஜியத்துக்குக் கிடைத் துள்ளது. இது கின்னஸ் சாதனை ஏட்டிலும் பதிவாகியுள்ளது.

பெல்ஜியத்தின் பிளமிஷ் மற்றும் பிரஞ்சு மொழி பேசும் அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட பிளவுகள் காரணமாக கடந்த வசந்த காலத்தின்போது அரசாங்கம் கவிழ்ந்தது.

கடந்த ஆண்டு ஜுன் மாதத்தில் நடத்தப்பட்ட தேர்தல் நிலைமையை மேலும் மோசமாக்கியது. பெல்ஜியத்தின் வடக்குப் பகுதியைச் சேர்ந்த டச் மொழி பேசும் செல்வந்தர்கள் பெல்ஜியத்தில் பிரிவினை கோரும் பிளமிஷ் பிரிவை ஆதரித்தனர்.

அதனையடுத்து ஆட்சியமைப்பதில் தொடர்ந்து சிக்கல் ஏற்பட்ட தால் இன்னமும் உத்தியோகபூர்வமாக அரசொன்று அங்கு நிறுவப்படவில்லை.

இதற்கு முன் ஈராக்கில்தான் இவ்வாறானதோர் நிலை காணப்பட் டது.289 தினங்கள் நீடித்தது. ஆனால் பெல்ஜியம் தற்போது அதைத் தாண்டி விட்டது.

அடுத்ததாக கம்போடியாவில் இவ்வாறான நிலை இதற்கு முன் 353 தினங்கள் நீடித்தது. பெல்ஜியம் அதையும் தாண்டி சாதனை படைக்குமா என்று அந்த நாட்டின் ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. (ஶ்ரீ-2)


“திருமுறைத் தேனமுது”

தேவார இசைப் பாடல்கள் ஒரே ஒலித்தட்டில் வெளிவந்துள்ளன



நல்லூர் திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகத்தினரால் வெளியிடப் பெற்ற, திருவாவடுதுறை ஆதீன இசைப் புலவர், தெய்வத் தமிழிசைச் செல்வர் கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பாடியுள்ள தேவார இசைப் பாடல்கள் ஐந்து பாகங்கள் ஒரே ஒலித்தட்டில் வெளியாகியுள்ளன.

இதில் கோளறு திருப்பதிகம், திரு நீற்றுத் திருப்பதிகம், திருக்கேதீச்சரத் திருப்பதிகங்கள், இரண்டு பொற்கிழித்திருப்பதிகம் உட்பட பஞ்சபுராணப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

ஶ்ரீ சிவகுருநாதா குருபீடம் (வேதாந்த மடம்), 18, குமாரசாமி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (4659)


# நினைவு நிகழ்வும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அமரர் பொன்னையா பெரிய தம்பி நினைவு நிகழ்வும் பெரியதம்பி ஐங்கரன் எழுதிய “கறுப்பு மழை” என்ற நினைவு நூல் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யா/புற்றளை மகாவித்தியாலயத்தில் திருமதி தி. சரஸ்வதி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நூல் உரையை ஜீவநதி ஆசிரியர் த. பரணீதரன், கலாசார உத்தியோகத்தர் கு. றஜீ வன் ஆகியோர் நிகழ்த்த நூலின் முதற் பிரதியை க. வீரகத்திப்பிள்ளை, வே.மனோகரன் சு. சுந்தரலிங்கம் ஆகியோர் பெற்றுக்கொள்வர். (ஶ்ரீ-2)

# உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு பாரிய பொறுப்புகள் உள்ளது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான மக்கள் பிரதிநிதிகளுக்குப் பாரிய பொறுப்புகள் இருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சி பேதமின்றி, உள்ளூராட்சி பிரதிநிதிகள் கடமைகளைச் செய்ய வேண்டுமெனவும் மேல் மாகாணத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளையும் தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (ஶ்ரீ-2)

DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்
ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

மார்ஷ் அதிரடியில்

# ராஜஸ்தானை புரட்டி எடுத்தது கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி

(மொகாலி)

மார்ஷின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயலை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் மொகாலியில் நேற்று நடைபெற்ற 23 ஆவது போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்ன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணிக்கு கில்கிறிஸ்ட் வால்தாரி ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.


இதில் வால்தாரி, திரிவெடி வீசிய 3 ஆவது ஓவரில் 2 சிக்ஸர்கள் 3 பவுண்டரிகள் விளாசி அசத்த கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 2.5 ஓவர்களில் 50 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் அணித்தலைவர் கில்கிறிஸ்ட், வோர்ன் வீசிய 4 ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்தார்.

எனினும் வோர்ன் வீசிய 5 அவது ஓவரின் 2 ஆவது பந்தில் கில்கிறிஸ்ட் 16 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மார்ஷ் அதிரடியைத் தொடர மறுமுனையில் வால்தாரி அடக்கி வாசித்தார்.

இதில் வோர்ன் வீசிய 9 ஆவது ஓவரின் முதலாவது பந்தில் சிக்ஸர் அடித்த வால்தாரி அடுத்த ஓவரில்



31 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய தினேஸ் கார்த்திக் பொறுப்பாக ஆடமறுமுனையில் மார்ஷ் அதிரடியாக ஆடினார்.

அதில் வோர்ன் வீசிய 13 ஆவது ஓவரில் 3 சிக்ஸர்கள் விளாசிய மார்ஷ் 29 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

மறுமுனையில் திரிவெடி வீசிய 14 ஆவது ஓவரில் அடுத்தடுத்து 3 பவுண்டரிகள் அடித்து கார்த்திக் கலக்க கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி ஓட்ட எண்ணிக்கை ஜெட் வேகத்தில் உயர்ந்தது.

எனினும் தினேஸ் கார்த்திக் 16 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 21 ஓட்டங்களுடன் தைட்டின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த நாயர் ஒரு ஓட்டத்துடன் ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஷோன் மார்ஷ் 42 பந்துகளில் (6 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 71 ஓட்டங்களுடன் வோட்ஷன் பந்தில் ஆட்டமிழக்க கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 19.1 ஓவர்களில் 190 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து மைக்லைரன் 2 ஓட்டங்களுடனும் பியூஸ் சாவ்லா 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 195 ஓட்டங்களை எடுத்தது.

கடைசி 5 ஓவர்களில் 26 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியைக் கட்டுப்படுத்தினார் அணித்தலைவர் ஷேன் வோர்ன்.

பந்துவீச்சில் ஷோன் தைட் 3 விக்கெட்டுக்களையும் ஷேன் வோர்ன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 196 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு அஸ்னோட்கர்- டிராவிட் ஜோடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் ராகுல் டிராவிட் 7 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 8 ஓட்டங்களுடன் ஹரிஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து அஸ்னோட்கர் 9 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 9 ஓட்டங்களுடன் பிரவீன் குமாரின் பந்தில் ஆட்டமிழக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 3 ஓவர்களில் 18 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து வோட்ஷனுடன் இணைந்த பின்னி பொறுப்பாக ஆடி ஆறுதலளித்தார்.

இதில் பிரவீன் குமார் வீசிய 4 ஆவது ஓவரில் வோட்ஷன் 3 பவுண்டரிகள் விளாசி அசத்தினார்.

எனினும் வோட்ஷன் 16 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 24 ஓட்டங்களை எடுத்து பிரவீன் குமாரின் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ரோஸ் ரெயிலர் பூச்சியத்துடன் சாவ்லாவின் பந்தில் வெளியேற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 8 ஓவர்களில் 49 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து பின்னியுடன் இணைந்த மனேரியா பொறுப்பான ஆட்டத்தை வழங்க ராஜஸ்தான் ரோயல்ஸ் சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடி 5 ஓவர்களில் 50 ஓட்டங்களைச் சேர்த்தபோது பின்னி 24 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து வந்த ராயுட் சிறப்பாக ஆடி நம்பிக்கையளித்தார்.

மறுமுனையில் மனேரியா 26 பந்துகளில் (2பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 34 ஓட்டங்களுடன் பாட்டின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின் வரிசையில் ராயுட் 25, யாங்னிக் 10 ஓட்டங்களை தமது பங்கிற்குப் பெற்றபோது ராஜஸ் தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 147 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

இதன் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் பிரவீன் குமார், பாட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹரிஸ், சாவ்லா, மைக்லரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# மலிங்கவுக்கு வந்தது வில்லங்கம்

## ஐ.பி.எல். தொடரில் பங்குபற்றாமல் சிகிச்சை பெறுமாறு வலியுறுத்து


(கொழும்பு)

ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றுவதை நிறுத்திவிட்டு காயத்திற்கு சிகிச்சை பெறுமாறு இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவை இலங்கை கிரிக்கெட் சபை வலியுறுத்தியுள்ளது.

மலிங்க தனக்கு காயம் ஏற்பட்டதாகக் கூறியமை குறித்து இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

தனக்கு காயம் ஏற்பட்டுள்ளதால் இங்கிலாந்து சுற்றுலாவில் மலிங்க பங்குபற்ற முடியாதென மலிங்க எம்மிடம் கூறிய நிலையில் தொடர்ந்தும் ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றுவது ஆபத்தானது. நாம் அவரை அங்கிருந்து திரும்பி வந்து சிகிச்சை பெறுமாறு கோரியுள்ளோம் என இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரும் கிரிக்கெட் குழுத் தலைவருமான துலிப் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளுக்கான 16 பேர் கொண்ட அணியில் மலிங்க இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



முழங்கால் உபாதை காரணமாக தன்னால் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற முடியாதென மலிங்க கடிதமொன்றின் மூலம் தெரிவித்திருந்ததாகவும் மெண்டிஸ் தெரிவித்தார்.

ஆனால் அவர் தொடர்ந்தும் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்காக மலிங்கவின் பதிலை எதிர்பார்த்திருப்பதாக துலிப் மெண்டிஸ் கூறினார்.

# மே 17 வரை ஐ.பி.எல் தொடரில் விளையாட இலங்கை வீரர்களுக்கு அனுமதி கிடைத்தது

## நிலைப்பாட்டை மாற்றியது விளையாட்டுத்துறை அமைச்சு

(கொழும்பு)

ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் இங்கிலாந்து சுற்றுலாவுக்காக மே 5 ஆம் திகதி முதல் நடைபெறும் பயிற்சி முகாமில் பங்குபற்றத் தேவையில்லை எனவும் அவர்கள் எதிர்வரும் மே 18 ஆம் திகதி லண்டனில் இருந்தால் போதுமானது எனவும் விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இங்கிலாந்து சுற்றுலாவுக்கான பயிற்சி முகாமில் பங்குபற்றுவதற்காக மே 5 ஆம் திகதி தாயகம் திரும்ப வேண்டும் என ஐ.பி.எல். தொடரில் பங்குபற்றும் இலங்கை வீரர்களுக்கு கிரிக்கெட் சபை மூலம் விளையாட்டுத்துறை அமைச்சு முன்னர் உத்தரவிட்டிருந்தது. இலங்கை வீரர்கள் இங்கிலாந்துக்குப் புறப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தெடர்பாக இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கும் இடையில் மோதல் ஏற்படும் அறிகுறி தென்பட்டது. இந் நிலையில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு தனது நிலைபாட்டை மாற்றிக்கொண்டுள்ளது.

இதன்படி சில வீரர்கள் கொழும்பில் பயிற்சிகளில் பங்கு பற்றாமல் நேரடியாக இலண்டன் வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் சபையிடமிருந்து நாம் ஏராளமான மின்னஞ்சல்களைப் பெற்றேன். இது தொடர்பாக தேர்வுக் குழுவினரையும் கிரிக்கெட் சபை அதிகாரிகளையும் நான் சந்திப்பேன் என அமைச்சர் அளுத்கமகே ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை நாம் அசௌகரியத்திற்குள்ளாக்க விரும்பவில்லை. இந்தியாவுடன் எமக்கு நல்லுறவு உள்ளது. அது தொடர வேண்டும் என நாம் விரும்புகிறோம் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை இலங்கை வீரர்கள் ஆரம்பத்தில் இணங்கியபடி மே 22 ஆம் திகதிவரை விளையாடாமல் அதற்கு முன்னதாக வெளியேறினால் அவர்களுக்கான சம்பளத்தை வழங்க வேண்டாம் என ஐ.பி.எல். அணிகளை இந்தியக் கிரிக்கெட் சபை கோரியுள்ளதாக என்.டி.ரி.வி தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் சபைக்குரிய வீரர்களின் வருமானத்தில் 10 சதவீத கொடுப்பனவையும் நிறுத்திவைக்குமாறும் இந்தியக் கிரிக்கெட் சபை கோரியுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ஆட்டங்கள்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
எதிர்
பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ்
மாலை 4.00 மணி
கொல்கத்தா

மும்பை இந்தியன்ஸ்
எதிர்
சென்னை சுப்பர் கிங்ஸ்
இரவு 8.00 மணி
மும்பை

NIRU KONDAVIL
ஆண்டு 4 முதல் O/L வரை
ENGLISH
திரு.சந்திரமௌலி திரு.சுதர்சன்
திரு.மகாதேவா செல்வி தர்சிகா

# வன்னியில் வசித்து வந்த...

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையின் போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை அதிகாரபூர்வமாக ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்படவுள்ள இந்த வேளையில், வெளியுலகத் தொடர்பின்றி மறைக்கப்பட்டுள்ள இலங்கையின் வடபகுதியில் பொது மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டமை, அடக்கிவைக்கப்பட்டுள்ள முகாம்கள், அந்த மக்கள் மீதான பல வேறு துஷ்பிரயோகங்கள் என்பவற்றை வெளிப்படுத்துகின்ற ஆதாரங்கள் சனல்-4க்கு கிடைத்துள்ளது.

இருபத்தியாறு வருடங்களாகத் தொடர்ந்த இலங்கையின் உள்நாட்டு இன முரண்பாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இந்த வேளையில் இலங்கையின் வடபகுதியில் முன்னர் விடுதலைப்புலிகளின் கோட்டையாக விளங்கிய பிரதேசத்தில் இருந்து மிகவும் அரிதான வீடியோக் காட்சிகள் எமக்குக் கிடைத்துள்ளன.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் இந்தப் பகுதிக்கு வெளியார் மற்றும் ஊடகவியலாளர்கள் செல்ல முடியாது. அந்தப் பிரதேசம் முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்குள்ள மக்கள் அச்சத்துடனும், பீதியுடனும் வாழ்ந்து வருகின்றார்கள். இந்தப் பிரதேசத்திற்கு எமது சுதந்திரமான தொடர்பாளர்கள் தமது உயிரைப் பணயம் வைத்து இந்தக் காட்சிகளைப் படமாக்கியுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் முகாம்களில் வாழ்வதையும், அங்கு திட்டமிட்ட வகையில் மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதையும், பெண்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களை இந்தக் காட்சிகள் காட்டுகின்றன.

இறுதி யுத்தம் நடைபெற்ற மாதங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். பலர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இறுதி யுத்தத்தின்போது யுத்தப் பிரதேசத்தில் இருந்த மக்களில் ஓர் இலட்சம் பேருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய கணக்குக் காட்டப்படவில்லை. இதற்கு ஆதாரமிக்க சான்றுகள் கிடைத்துள்ளன.

கடந்த 2008 ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கில் யுத்தப் பிரதேசத்தில் 4 இலட்சத்து 30 ஆயிரம் பொதுமக்கள் வசித்ததாக அரசாங்கப் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இறுதிச் சண்டையின் கடைசிச் சில மாதங்களில் யுத்தப் பிரதேசத்தில் இடம்பெற்றிருந்த மோசமான நிலைமைகளின்போது 2 இலட்சத்து 90 ஆயிரம் பொதுமக்கள் மட்டுமே இடம்பெயர்ந்து அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டிருந்த முகாம்களை நாடிச் சென்றதாக ஐ.நா. அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மிகுதியான ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் எங்கு சென்றார்கள்? என்ன வானார்கள்? என்பது தெரியவில்லை.

இப்போதும் அங்கு பலர் காணாமல் போயுள்ள தமது குடும்பத்தினரை தேடிக்கொண்டிருக்கின்றார்கள். 2006 ஆம் ஆண்டு தனது மகனை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதைக் கண்ட டாக்டர் மனோகரன் உள்ளிட்ட பலர் தமக்கு நேர்ந்துள்ள அவலங்களுக்கு நீதி கேட்டு போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இறுதிச் சண்டைகளின்போது இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்ந்துள்ள ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை முறைப்படி வெளியிடப்படவிருந்த வேளையில் ஊடகங்களுக்குக் கசியவிடப்பட்டது. இவ்வாறு கசிந்துள்ள தகவல்கள் இலங்கையில் மனிதாபிமானத்திற்கும் மனித உரிமைகளுக்கும் எதிராக குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளன. இது நிரூபிக்கப்படும் பட்சத்தில் அது சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீது நடத்தப்பட்ட பாரதூரமான தாக்குதல்களாகவே கருதப்படும்.

யுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை அரசாங்கமும், விடுலைப்புலிகளும் போர்க் குற்றங்களை இழைத்துள்ளார்கள் என்பதை அது சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கை அரசாங்கம் படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள் செய்ததுடன் பொது மக்களின் வைத்தியசாலைகளின் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதேவேளை விடுதலைப் புலிகள் பொதுமக்களைக் கேடயமாகப் பயன்படுத்தியதுடன் சிறுவர் போராளிகளை தமது அணியில் சேர்த்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் முழுமையாக இன்னும் பதிலளிக்காத போதிலும் இந்த அறிக்கையானது அடிப்படையும், ஆதாரங்களுமற்றது என மறுத்துள்ளது.

ஆயினும் யுத்த காலத்தில் ஐ.நாவின் பேச்சாளராக இலங்கையில் பணியாற்றிய கோடன் வெயிஸ், இலங்கை அரசு மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சம்பவங்களைகடந்த 1995ஆம் ஆண்டு பொஸ்னியாவில் 7ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்ட படுமோசமான சம்பவங்கள் என விபரித்துள்ளார்.

சனல்- 4 இன் செய்தியறிக்கையானது ஆதாரமற்ற வெறும் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டது என லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிக்கை ஒன்றில் மறுத்துள்ளது. இந்தச் செய்தியில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் வெளிப்படைத்தன்மையற்றவை. உறுதிப்படுத்த முடியாதவை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

முன்னைய பல சம்பவங்கள் சனல்- 4 ஒளிபரப்பியதைப் போன்று பொதுப்படையான வதந்திக் கதைகளை உள்ளடக்கிய மற்றுமொரு பிரசாரமே தவிர வேறு ஒன்றுமில்லை. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியாகியுள்ள இந்த வேளையில் இலங்கை அரசாங்கத்தின் மீது கொடூரமாகக் குற்றம் சுமத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு பொய்ப் பிரசாரமே என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

கிருஷ்ணா அடகு சேவை
இல. 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல: J/DS/BR/472
மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி (28.02.2010) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி (15.05.2011) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்றுக்கொள்ளவும் அல்லது ஒரு பகுதிப் பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும்.
இரண்டும் செய்யத்தவறின் 15.05.2011 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
இல. 370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5046
உரிமையாளர்.
(4650)

பட்டதாரி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு பரீட்சை
பொது அறிவு
வே.தபேந்திரன் B.Com, M.A
இலங்கை, சர்வதேச நடைமுறை விடயங்கள்- கடந்த ஒரு வருடத்திற்கு உரிய குறிப்புக்கள் வழங்கப்படும்.
2011/04/23,24 (சனி, ஞாயிறு) நேரம் : 12.00-3.00 P.M. வரை
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212228148
(4656)



Api Beauty Parlour and Training Academy
O/L பெறு பேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவிகள் மற்றும் ஆர்வமுள்ள நங்கையர்களுக்கானகுறித காலப் பயிற்சிகள். (ஒரு மாதம்)
* Bridal make up-புதுவிதமான மணப்பெண் அலங்காரம்
* Cake Icing-கேக் ஐசிங் பலவகையான ஐசிங் பூக்களுடன்
* Facials-முக அலங்காரம்
Hair Cutting — Nail Arts
Hair treatmetments — Pedicure
Manicure இன்னும் பலவகையான பயிற்சிகள்வழக்கப்படும்
Note:-பயிற்சி முடிவின் போது சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* பயிற்சி ஆரம்பம் :- 26.04.2011 நல்லூர் கோவில் வீதி.
உடன் தொடர்புகளுக்கு :-021 222 9586,0774525535
இல. 06, சட்டநாதர் வீதி, நல்லூர்.
(4653)

வடமாகாண பட்டதாரிகள் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு
ஆரம்பம்: நாளை சனி பிற்பகல் ஒரு மணி
ஆசிரியர்- த.தவசேகர்
சனி, ஞாயிறு பி.ப 1.00-5.00மணிவரை ஏனைய நேரங்கள் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.
DMI ஆரியகுளம் சந்திக்கு அருகில் (சி-3047)

வேலையாள்கள் தேவை
பண்டத்தரிப்பிலுள்ள Studio ஒன்றிற்கு பெண் பிள்ளைகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே:- 0779785717
(4660)

கார் விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையிலுள்ள A/C சிறந்த முறையில் (WORKING CONDITION), POWER STEERING, மற்றும் அனைத்து வளங்களுடனும் NISSAN B 11 14 XXXX தொடரிலக்கமுடைய கார் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
S M COMPEX
824, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0774528818
(4657)

தமிழைப்போல ஆங்கிலம் பேச விரும்புகிறீர்களா?
ஆசிரியர்கள், அலுவலர்கள், வங்கியாளர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான
MyWay இன் சனி, ஞாயிறு 3 மாத ஆங்கில பயிற்சிநெறி
தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கான டிப்ளோமா பாடநெறி
புதிய பிரிவு ஆரம்பம் : 23.04.2011 சனிக்கிழமை
பயிற்சிக்கான மொத்த சலுகைக்கட்டணம் : 3000/-
பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 2-3, 3-4, 4-5, 5-6
ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்
MyWay 182, Stanley Road, Jaffna
Opposite to Ceylinco Insurance
077 33 63 456, 021 2229505

அனைவரும் கற்கக்கூடிய கற்கைநெறிக்கட்டணம் MCS ல்
A/L ? Pass / Fail
CIMA-UK | Engineering-USA | BIT University of Colombo | Multimedia Adobe
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Government Scholarship.
SMS your name & course to 772 395 895 & Get Schol.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 23.04.2011
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL



FWC
வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
ஆண்டுப் பொதுக் கூட்டம்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 30.04.2011 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும். அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகம் கொடுக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.
வெளிக்கள நிலையம்,
தொண்டைமானாறு.
செயலாளர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.